ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் திருமணத்தின்போது அன்னாரது வயது 9 அல்ல — பக்கம் 6

ஹஸ்ரத் அஹ்மது (அலை) வாழ்க்கை வரலாறு (தொடர்–7) — பக்கம் 9

ஈதுல் அழ்ஹா பேருரை 20.05.1929 — பக்கம் 16

ஹுஸீர் (அய்யதஹுல்லாஹ்) ஒரு முன்மாதிரி கணவர் — பக்கம் 19


மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | July 2022 | Issue No. 8

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340





# திருக்குர்ஆன்

لَيۡسَ عَلَيۡكُمۡ جُنَاحٌ اَنۡ تَبۡتَغُوۡا فَضۡلًا مِّنۡ
رَّبِّكُمۡ ؕ فَاِذَآ اَفَضۡتُمۡ مِّنۡ عَرَفٰتٍ
فَاذۡكُرُوا اللّٰهَ عِنۡدَ الۡمَشۡعَرِ الۡحَرَامِ ۖ
وَاذۡكُرُوۡهُ كَمَا هَدٰٮكُمۡ ۚ وَاِنۡ كُنۡتُمۡ
مِّنۡ قَبۡلِهٖ لَمِنَ الضَّآلِّيۡنَ

(ஹஜ்ஜிற்குரிய நாட்களில்) நீங்கள் உங்கள் இறைவனின் அருளைத் தேடிக் கொள்வது உங்களுக்குப் பாவமன்று. பின்னர் நீங்கள் அரஃபாத்திலிருந்து திரும்பும் பொழுது மஷ்அரே ஹராமுக்கு அருகில் அல்லாஹ்வை நினைவு கூருங்கள். அவன் உங்களுக்கு வழிகாட்டியது போன்று அவனை நினைவு கூருங்கள். அதற்கு முன்னர் நீங்கள் நிச்சயமாக வழிதவறியவர்களைச் சார்ந்தவர்களாக இருந்தீர்கள். (2:199)



# ஹதீஸ்

عَنِي النَّبِي (ص) قالَ:
أَعْظَمُ أَهْلُ عَرَفاتَ جُرْماً مَنْ
إِنْصَرَفَ وَ هُوَ يَظَنُّ أَنَّهُ لَنْ يُغْفَرَلَهُ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“(ஹஜ்ஜின்போது) அரஃபாத்திற்குச் சென்று திரும்பும் ஒருவர் தனது பாவங்கள் மன்னிக்கப்பட -வில்லை என்று எண்ணுவதே அவரது பெரும் பாவமாகும்.”

(பிஹாருல் அன்வார் தொகுதி 96 பக்கம் 248)

# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உதய்பூர் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கிறது!

இஸ்லாம் எந்த சூழ்நிலையிலும் தீவிரவாதத்தை அனுமதிப்பதில்லை. இத்தகைய கொடூர செயல்களை இஸ்லாத்தின் பெயரால் செய்பவர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை அறியாதவர்கள். அவர்களது செயல்கள் இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமானவை.

இந்திய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், உதய்பூரில் தீவிரவாதிகளால் நிகழ்த்தப்பட்ட இஸ்லாத்திற்கு புறம்பான செயல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன், குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கிறது.

கடந்த 28.06.2022 (செவ்வாய்க்கிழமை) ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில், இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு மனிதர், இரண்டு பெயர் தாங்கி முஸ்லிம்களால் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். இது அறவே மனிதாபிமானமற்ற, இஸ்லாமிய போதனைகளுக்கு முற்றிலும் முரணான செயலாகும். இந்திய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இந்தப் படுகொலையை அனைத்து விதத்திலும் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

இஸ்லாம் ஓர் அமைதியின் மார்க்கமாகும். அது தீவிரவாதத்தை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், கொடுமைகளையும் அநீதியையும் எத்தகையதொரு சூழ்நிலையிலும் அனுமதிப்பதில்லை. மேலும் அத்தகைய கொடுஞ்செயல்களை இஸ்லாத்தின் பெயரால் செய்பவர்கள் தூய திருக்குர்ஆனின் போதனைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறைகளையும் அறவே அறியாதவர்கள் ஆவர். அத்தகைய கொடூர செயல்களில் ஈடுபடுவோர் இஸ்லாத்தின் கோட்பாடுகளுக்கு நேர் மாற்றமாக செயல்படுபவர்கள் ஆவர்.

இத்தகைய கொடும்பாதக செயல்கள் மிகவும் வேதனைமிக்கவையாகும். இக்குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இந்த பயங்கர சம்பவம் நாடு முழுவதும் சீற்றத்தை ஏற்படுத்தி, நாட்டில் சமாதானத்தையும், அமைதியையும், சீர்குலைக்கும் நிலைமையை உருவாக்கியுள்ளது. இந்திய மக்கள் என்ற முறையில், இத்தருணத்தில் நாமனைவரும் ஒன்றிணைந்து தீவிரவாதத்தை எதிர்ப்பதும், அனைத்து வகை வெறுப்புகள், விரோதங்களை வேரறுப்பதும் நமது பொறுப்பாகும். பரஸ்பர மதிப்பளித்தல், சகோதரத்துவம் ஆகியவற்றின் மூலம் சமுதாயத்தில் அமைதி, ஒற்றுமையை நிலைநாட்டுவதில் நாம் தவறாது பங்கெடுக்க வேண்டும்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பொறுத்த வரையில், இதுபோன்ற மனிதாபிமானமற்ற தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்து, அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவது, இது முதன்முறை அல்ல என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். மாறாக, எங்களது ஜமாஅத், மார்க்கத்தின் பெயரால் இழைக்கப்பட்ட அனைத்துவகை கொடுமைகளையும் எதிர்ப்பதில் எப்பொழுதும் முன்னணியில் இருந்து வருகின்றது.

இதற்குக் காரணம் என்னவெனில், அனைத்து மதங்கள், மதத்தலைவர்கள், வேதங்கள் ஆகியவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டும் என இஸ்லாம் போதிக்கின்றது. மேலும், அனைத்து மத உணர்வுகளுக்கும் கண்ணியமளிக்க வேண்டும் என்று இஸ்லாத்தைப் பின்பற்றும் மக்களுக்கு அது அறிவுறுத்துகின்றது. எனவே, எந்த ஒரு மதத் தலைவர்களுக்கு எதிராகவும் எவ்வித தரக்குறைவான கருத்துக்கள் தெரிவிப்பதும் இஸ்லாத்தில் கடுமையாகத் தடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அப்படிப்பட்ட துரதிர்ஷ்ட நிகழ்வுகள் இஸ்லாத்தின் தூய நல்லடியார்களைக் கொச்சைப்படுத்தும் விதமாக நடக்க நேரிட்டால், அதற்கு உடல் ரீதியான எந்த ஒரு தண்டனையையும் இஸ்லாம் பரிந்துரைக்கவில்லை. மேலும், அதற்காக எவ்வித கடுமையான பழிவாங்குதலையும் அது நியாயப்படுத்தவில்லை. திருக்குர்ஆனின் போதனைகளிலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை நடைமுறைகளிலும் அத்தகைய உதாரணங்களை நம்மால் ஒருபோதும் காண முடியாது. மாறாக, பொறுமை, சகிப்புத்தன்மை ஆகியவற்றை மட்டுமே எல்லாத் தருணத்திலும் நிலைநாட்டுமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

பல்வேறு மதத்தைப் பின்பற்றும் மக்கள் ஒற்றுமையுடன் வாழ்கின்ற இந்தியத் திருநாடு, பல்வகை சித்தாந்தங்கள், வேறுபட்ட இறை நம்பிக்கைகளின் தாயகமாகத் திகழ்ந்து வருகின்றது. வேற்றுமையில் ஒற்றுமை என்பது இம்மாபெரும் தேசத்தின் குறிப்பிடத்தக்க தனிச்சிறப்பாகும். எனவே, மதத்தின் பெயரால் எழும் பிரிவினைகளை ஒன்றிணைந்து எதிர்ப்பதும், பகைமைகளுக்கு முடிவு கட்டுவதும் இந்திய நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். இந்நோக்கத்திற்காக, நாம் ஒருவர் மற்றொருவருடன் அன்புடனும் மதிப்புடனும் நடந்து கொள்வது மிக அவசியமாகும்.

இந்திய அஹ்மதிய்ய முஸ்லிம்கள் என்ற முறையில், நமது நாடு அமைதியின் சுவர்க்கமாகத் திகழ, சர்வ வல்லமைமிக்க இறைவனை நாங்கள் பிரார்த்தனை செய்கின்றோம். நமது மதம், இறைநம்பிக்கை எதுவாயிருப்பினும், இந்திய மக்களாகிய நாம் அனைவரும், இங்கு அமைதியுடனும் ஒற்றுமையுடனும் வாழ்ந்து வருவோமாக! நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக, நமது மிகச்சிறந்த பங்களிப்பை வழங்குவதற்கான ஆற்றலை இறைவன் நமக்குத் தந்தருளுவானாக!

- Press Release (July 1, 2022), Incharge - Press and Media, Ahmadiyya Muslim Jama'at, India.

தமிழாக்கம்: J.S. சலீம் அஹ்மது

# ‘இஸ்முஹு அஹ்மது’ என்ற முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே!

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்
ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)

7

தமிழாக்கம்: மவ்லவி R. அப்துல்லாஹ்

**ஒன்பதாவது ஆதாரம்:** இவ்வதிகாரத்தோடு இருக்கும் அடுத்து வரும் அதிகாரத்தில் இறைவன் கூறுகின்றான்:


هُوَ الَّذِيْ بَعَثَ فِي الْأُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ
وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۗ
وَإِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ

மேலும் இதற்குப் பிறகு கூறுகின்றான்:

وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ۗ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

மேலும் அவன் இந்தத் தூதரை உங்களுடன் சேர்ந்திடாத மற்றொரு கூட்டத்திலும் தோன்றச் செய்வான். இந்த வசனங்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இருவேறு வருகையைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் ஹதீஸ்களில் அன்னாருக்குப் பிறகு ஒரு மஸீஹின் (வருகையைப் பற்றி) கூறப்பட்டுள்ளது. அவர்களைக் குறித்து அன்னார், “அவர் எனது கபரில் அடக்கம் செய்யப்படுவார்” என்ற அளவுக்குக் கூறியுள்ளார்கள். அதாவது நானும், அவரும் ஒன்றோடு ஒன்றாக இருப்போம். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இரண்டாவது வருகை என்பதன் பொருள் வாக்களிக்கப்பட்ட மஸீஹே ஆவார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே மீண்டும் வருவார்கள் என்று நினைப்பதற்கு இஸ்லாம் மறுபிறவிக் கொள்கையைக் கொண்டாதாக இல்லை. ஆகவே அன்னாரின் இரண்டாம் வருகை என்பதன் பொருள் ஒருவர் அன்னாரை ஒத்தவராக வருவார் என்றே பொருள் கொள்ள முடியும். அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹே அன்றி வேறெவரும் இருக்க முடியாது. அவரைக் குறித்தே, “அவர் எனது கபரில் அடக்கம் செய்யப்படுவார்” என்று கூறப்பட்டுள்ளது. (மிஷ்காத் கிதாபுல் ஃபித்ன் பாப் நுஸூலுல் ஈஸா அலைஹிஸ்ஸலாம்)

இப்போது நாம் இதனை முன்னுள்ள அதிகாரத்தோடு இணைக்கும்போது அதிலும் முதன்மையாக ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் பற்றி வந்துள்ளது. பிறகு ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி வந்துள்ளது. பிறகு இந்த அதிகாரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இரு வருகையைக் குறித்து கூறப்பட்டுள்ளது. அதில் ஒன்று மஸீஹின் வருகை என்ற விதத்தில் நிறைவேறியது.



இவ்விரண்டு விஷயங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது தெளிவாகத் தெரிய வருவது என்னவென்றால், முதல் அதிகாரத்தில் அஹ்மது என்ற முன்னறிவிப்பானது இவ்விஷயத்தைப் பறைசாற்றுகிறது. அதாவது எவ்வாறு இந்த உம்மத்தில் மூஸா (அலை) அவர்களைப் போன்றவர் தோன்றினாரோ அவ்வாறே மஸீஹ் (அலை) அவர்களைப் போன்றவரும் அஹ்மது என்ற பெயரில் தோன்றுவார். இவ்வகையில் இவ்விஷயத்தைத் தெளிவாக்கவே சூரா ஜுமுஆவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இரண்டு வருகையைக் குறித்து கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் சிந்திக்கக் கூடியவர் அஹ்மது என்பவர் அன்னார் (ஸல்) அவர்களின் இரண்டாம் வருகையே அன்றி முதல் வருகை கிடையாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இதற்கு முன் மூஸா (அலை) அவர்களைப் பற்றி கூறப்பட்டு விட்டது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் போன்றவர் ஆவார்கள்.

ஆக, இறைவன் சூரா ஜுமுஆவை சூரா ஸஃப்ஃபுடன் இணைத்து “இஸ்முஹு அஹ்மது” என்ற முன்னறிவிப்பை இன்னும் தெளிவுபடுத்தி விட்டான். விஷயம் தெளிவாக உள்ளது. இதனை ஒருவர் ஏற்பதும் ஏற்காததும் அவரின் விருப்பமாக உள்ளது. அல்லாஹ்வின் அருளினால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்பவர்களாகிய நீங்கள் அஹ்மதின் தோழர்களாக இருக்கிறீர்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இரண்டாம் வருகையின் மீது ஈமான் கொண்டவர்களாவீர்கள். இந்நேரத்தில் உங்களுடன் போட்டியிட வேறு எந்த ஜமாஅத்தும் இல்லை. இந்நேரத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தை இறைவன் நபித்தோழர்களைப் போன்றவர்களாக ஆக்கியுள்ளான். இந்த ஒரு ஜமாஅத்துதான் அனைத்து வகையான இன்னல்கள், கஷ்டங்கள் மற்றும் தொல்லைகளைப் பெற்று வருகிறது. ஆனால் இதன் பிறகும் கூட இறை மார்க்கத்தைப் பரப்புவதை விட்டு விலகவுமில்லை; சோர்வடையவுமில்லை. உங்களிடம் இந்தக் குறை இருக்கிறது. இன்னென்ன பலவீனம் இருக்கின்றது என்று கூறப்படுகிறது என்றால் நீங்கள் தைரியம் மற்றும்

உணர்ச்சியுடன் செயல்பட வேண்டும் என்பதற்காகவே கூறப்படுகிறது என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. ஆனால் நீங்கள்தான் உலகில் ஒப்பற்ற ஒரு ஜமாஅத்தாக இருக்கின்றீர்கள். மேலும் நபித்தோழர்களிடம் இருந்த அதே முன்மாதிரி உங்களிடமும் இருக்க வேண்டும். இன்று உங்களை நோக்கி நீங்கள் நபித்தோழர்களைப் போன்றவர்கள் இல்லை என்று கூறுபவர் குருடராகத்தான் இருக்க முடியும்.

எனவே இப்பொழுது நீங்கள் உலகத்தின் பார்வையில் ஏழைகளாகவும் பலவீனமானவர்களாகவும் இருக்கின்றீர்கள். ஆனால் இறைவனின் பார்வையில் நீங்கள் மிகவும் ஆற்றல் மிக்கவர்களாக இருக்கின்றீர்கள். உலகத்தின் பார்வையில் நீங்கள் இழிவானவர்களாக இருக்கின்றீர்கள். ஆனால் இறைவனிடத்தில் உங்களின் அந்தஸ்து உயர்ந்ததாக இருக்கின்றது. மேலும் கண்ணியமாகப் பார்க்கப்படுகிறீர்கள்.

எனவே அந்த நேரம் வரவிருக்கிறது. அப்போது இறைவன் உங்களை உலகத்தின் பார்வையிலும் உயர்வைப் பெற்றவர்களாக, கௌரவமுடையவர்களாக ஆக்கி விடுவான். மேலும் உங்களிடம் உலகம் தனது கண்களைக் கொண்டு அஹ்மதின் ஜமாஅத்தின் முன்னறிவிப்புகள் நிறைவேறுவதைக் கண்டு கொள்ளும். ●




# உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குங்கள்

மேற்கு லோகன் (வட அமெரிக்கா) மஜ்லிஸிலிருந்து ராஹிப் சித்தீக்கி சாஹிப் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் கேட்ட கேள்வி.

சில (குத்தாம்) இளைஞர்கள் அஹ்மதி அல்லாத பெண்களைத் திருமணம் செய்கின்றனர். இதன் விளைவாக வருங்கால சந்ததிகளும் அஹ்மதி அல்லாதவர்களைத் திருமணம் செய்கின்றனர். நாம் இதிலிருந்து எவ்வாறு தவிர்ந்து கொள்வது?

**ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் பதில்:**

நீங்கள் உங்கள் வருங்கால சந்ததிகளைக் காப்பாற்ற விரும்புகிறீர்கள் என்றால், உங்கள் சந்ததிகளை ஜமாஅத்துடன் இணங்கி வாழ வைக்க விரும்புகிறீர்கள் என்றால், அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுடன் ஒன்றியிருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்றால், முதலில் நீங்கள் மார்க்க அறிவை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். மார்க்கம் என்றால் என்ன என்பதை நீங்கள் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். பிறகு, நீங்கள் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதையும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். உங்களுடைய முன்னுரிமைகள் வெறும் உலக ஆதாயங்களுக்காக மட்டுமே இருக்கும் என்றால், அதன் விளைவு இப்படித்தான் இருக்கும். இவ்வாறு சிலர் ஜமாஅத்திற்கு வெளியே திருமணம் செய்கின்றனர். மார்க்கத்திற்காக உங்களுடைய முன்னுரிமைகள் இருக்கும் என்றால், “நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பேன்” என்று உறுதிமொழியில் நீங்கள் கூறுவது உண்மை என்றால், அஹ்மதி பெண்ணையே நீங்கள் திருமணம் செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் ஒரு பெண்ணை அவரது அழகுக்காகத் திருமணம் செய்கிறார். அல்லது அவரது செல்வத்திற்காக திருமணம் செய்கிறார். அல்லது அவரது குடும்ப அந்தஸ்தைப் பார்த்து திருமணம் செய்கிறார். ஆனால் மார்க்கப் பற்று கொண்ட பெண்ணுக்கு நீங்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும். நான் இந்தக் கருத்தை என்னுடன் நடைபெற்ற முந்தைய சந்திப்பு நிகழ்ச்சியிலும் ஞாபகமூட்டினேன். ஆகவே, இளைஞர்கள் நல்ல மார்க்கப் பற்று கொண்ட பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கினால், பெண் பிள்ளைகளும் மார்க்கப் பற்றுள்ளவர்களாக விளங்க முயற்சி செய்வார்கள். அவர்கள் தமது மார்க்க அறிவை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்வார்கள்.

இவ்வாறு நீங்கள் வருங்கால சந்ததிகளைக் காப்பாற்றிக் கொள்ளலாம். திருமணம் செய்ய வேண்டும் என்று வந்து விட்டால் முதலாவதாகக் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விஷயம், உங்கள் உலகப் பேராசைகள் அதன் நோக்கமாக இருக்கக் கூடாது என்பதே. நீங்கள் பல விஷயங்களைக் குறித்து பரிசீலனை செய்ய வேண்டும். அதில் உங்கள் மார்க்கப் பற்று, உங்கள் சுற்றுச்சூழல், உங்கள் தராதரம், முக்கியமாக உங்கள் வருங்கால சந்ததிகளின் நல்வாழ்வு, இதை ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

நிக்காஹ் குத்பாவின் போது நாம் ஓதுகின்ற வசனங்களுள் ஒன்று, “ஒவ்வோர் ஆன்மாவும் நாளைக்கென்று எதனை அனுப்புகின்றது என்பதை கவனிக்க வேண்டும்” என்பதாகும். (59:19) இதன் பொருள்: நீங்கள் எவ்வாறு உங்கள் சந்ததிகளுக்கு மார்க்கப் பயிற்சி வழங்குகிறீர்கள் என்று கவனியுங்கள் என்பதாகும். உங்கள் மனைவி மார்க்கச் சிந்தனையற்றவராக இருந்தால், அவர் மார்க்கத்தைக் குறித்து உங்களுடன் மாற்றுக் கருத்து கொண்டவராக இருந்தால், ஆன்மீக சிந்தனையற்றவராக இருந்தால் உங்கள் வருங்கால சந்ததிகளும் சீர்கெட்டு விடும்.

ஜமாஅத்திற்கு வெளியே திருமணம் செய்தால் மட்டுமல்ல, ஜமாஅத்திற்குள்ளேயும் கூட நீங்கள் மார்க்கச் சிந்தனை உடைய மற்றும் ஒழுக்கத்தில் சிறந்த பெண்களை உங்களுக்காகத் தேட முயற்சி செய்யுங்கள். இவ்வாறு நாம் நமது வருங்கால சந்ததிகளைப் பாதுகாக்க முடியும்.

(அப்துல் காதிர், தென் தமிழகத்துக்கான மேலிடப் பிரதிநிதி, ரிஷ்தா நாத்தா துறை)

# ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் திருமணத்தின் போது அன்னாரின் வயது 9 அல்ல

- அமீர் அஸீஸ் அஹ்மதி, கல்கத்தா -




**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

[ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைத் திருமணம் செய்த போது அன்னார் பருவமடைந்திருக்கவில்லை என்று இஸ்லாத்தை விமர்சிப்பவர்கள் மீண்டும் மீண்டும் கூறி வருகின்றனர்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மணம் முடித்தபோது அன்னாரின் உண்மையான வயது எத்தனை என்பதைக் குறித்த விஷயம் மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப் -பட்டிருப்பதையும், காழ்ப்புணர்ச்சி கொண்டு உண்மை திரித்துக் கூறப்படுவதையும் பார்க்க முடிகிறது. விமர்சகர்கள் பல்வேறு தளங்களிலும் சமூக வலைதளங்களிலும் நற்பண்புகளின் முழுமையான முன்மாதிரியாகத் திகழ்ந்தவரைக் குறித்து ஏளனம் செய்து கூக்குரல் எழுப்பி வருகின்றனர்.

சில ஹதீஸ்களைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு சில விஷமிகள் சமூக வலைதளங்களில் தவறான கருத்தைப் பரப்பி வருகின்றனர். இந்த ஹதீஸ்களின் அறிவிப்பாளர்கள் இவ்விஷயத்தில் குழப்பம் ஏற்படும் அளவுக்கு தமக்கிடையே பல்வேறு அம்சங்களில் முரண்பட்டிருப்பதை இந்த விஷமிகள் அறிவதில்லை.

கட்டுரை ஆசிரியர் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மணமுடிக்கும் சமயத்தில் பருவ வயதை எட்டி இருக்கவில்லை என்ற அடிப்படையற்ற அவதூறைச் சான்றுகளுடன் ஆணித்தரமாக மறுக்கின்றார். இந்தச் சான்றுகள் இவ்விஷயம் தொடர்பாக அவதூறு செய்பவர்கள், விமர்சகர்கள் மற்றும் உண்மையை அறிய விரும்புபவர்கள் ஆகிய அனைவரின் கண்களையும் திறக்க போதுமானதாகும்.]

## ஆறு வருடம் என்ற அறிவிப்பின் நம்பகத்தன்மையற்ற நிலை

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் குழந்தைப் பருவத்தில் திருமணம் புரிந்தார்கள் என்று கூறும் பல வரலாற்றாசிரியர்கள் புகாரி ஹதீஸ் நூலில் வந்துள்ள ஹதீஸ்களையும் பிற ஹதீஸ் நூல்களில ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தமக்குத் திருமணமானபோது தாம் ஆறு வயதுடையவராக இருந்ததாகவும், கணவரோடு சென்ற போது ஒன்பது வயதுடையவராக இருந்ததாகவும் தாமே கூறியிருப்பதையும் ஆதாரமாகக் கூறுகின்றனர். எனவே ஆயிஷா (ரலி) அவர்களின் திருமண வயதைக் கணக்கிடும் போது இத்தகைய ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களும் ஆயிஷா (ரலி) அவர்களின் சொந்த கருத்தும் ஏன் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. இந்த வாதம் சிறப்பாக கவனிக்கத்தக்கதாகும்.

உண்மை என்னவெனில், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் திருமணம் புரிந்தபோது அன்னாருக்கு ஆறு வயது என்றும் கணவரது வீட்டிற்கு சென்றபோது அன்னாருக்கு ஒன்பது வயது என்றும் கூறும் இந்த ஹதீஸ்களை உறுதி செய்யப்பட்ட வரலாற்றுச் சம்பவங்களின் ஒளியில் ஆராயும் போது அவை உண்மையல்ல என்பது தெளிவாகிறது.

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் திருமண நிகழ்வின் கால வரிசையுடன் பொருந்தாமை

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடனான நிக்காஹ் - முறையான திருமண அறிவிப்பு நபித்துவத்தின் 10 -வது வருடத்தில் ஷவ்வால் மாதத்தில நிகழ்ந்தது. (தபக்காத் அல் குப்ரா - இப்னு ஸாத் பாகம் 8 பக்கம் 271 - முதற் பதிப்பு 1996)

அதைப் போன்று ஹிஜ்ரத்திற்குப் பின்னர் 2 -வது வருடத்தில் ஷவ்வால் மாதத்தில்தான் இந்தத் திருமணத்தின் வீடுகூடல் நடைபெற்றது. (ஷாரா அல்லாமா அல் ஸரக்கானி அலல் மவாஹிப் அல் லதுன்னிய்யா அல்லாமா ஷகாபுத்தீன் அல் குஸ்த்தாலானி பாகம்-4 பக்கம் 383 ஆயிஷா உம்முல் மூமினீன், தாருல் குத்புல் இல்மிய்யா, பெய்ரூட், லெபனான், முதற்பதிப்பு 1996)

இந்தச் சான்றுகளை வைத்துப் பார்க்கும் போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிக்காஹ் மற்றும் திருமணத்திற்கு இடையில் முழுமையாக 5 வருட இடைவெளி இருந்துள்ளது என்பதை எவரும் அறிந்து கொள்ள முடியும். எனவே அன்னாரது நிக்காஹ் மற்றும் திருமணத்தின்போது 6 மற்றும் 9 வருடங்கள் உடையவராக இருந்தார்கள் என்ற அறிவிப்புகள் இந்த உறுதி செய்யப்பட்ட வரலாற்று உண்மைகளோடு பொருந்தவில்லை என்பதால் அவை ஏற்கத்தக்கவையல்ல.

மேலும் ஆறு வயது குறித்த அறிவிப்பும் உறுதியானது அல்ல. அதாவது நிக்காஹ்வின் போது அன்னாருக்கு வயது 6 வயது என்றும் 7 வயது என்றும் (சஹீஹ் முஸ்லிம், கிதாபுல்

நிக்காஹ்) முரண்பாடு உள்ளது. இது இந்த அறிவிப்பின் தெளிவின்மையையும் அறிவிப்பாளர்களில் எவரோ ஒருவர் தனது அறிவிப்பில் தவறிழைத்துள்ளார் என்பதையும் காட்டுகிறது.

## ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஏற்கனவே நிச்சயம் செய்யப்பட்டிருந்தார்கள்

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் நிச்சயம் செய்யப்படுவதற்கு முன்னர் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் முத்திம் பின் அதிய் என்பவருடன் நிச்சயம் செய்யப்பட்டிருந்தார்கள். (முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல், முஸ்னத் அல் அன்ஸார்). இது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அந்த நேரத்தில் திருமணத்திற்கான வயதை அடைந்திருந்தார்கள் என்பதையும் அப்போது அவர்களது வயது 6 அல்ல என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

## சூரா அல்-கமர் அருளப்பட்ட ஆண்டு

புகாரியில் இடம்பெற்றுள்ள ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

''அது மட்டுமன்று, அந்த நேரம், அவர்களுடைய அழிவுக்குக் குறிப்பிடப்பட்ட நேரமாகும். மேலும் அந்த நேரம் மிகுந்த பேராபத்தானதும் மிக்க கசப்பானதுமாகும்'' (54:47) என்ற வசனம் மக்காவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டபோது நான் விளையாடிக் கொண்டிருக்கும் சிறு பெண்ணாக இருந்தேன். (சஹீஹ் புகாரி - கிதாபுத் த∴ப்ஸீர்)

இந்த வசனம் சூரா அல்-கமரில் உள்ளது. அறிவிப்புகளின்படி சூரா அல்-கமர் நபித்துவத்தின் 5 -வது ஆண்டில் (கி.பி 614 -ல்)அருளப்பட்டதாகும். (The Bounteous Koran by M.M. Khatib (1985). ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் வாழ்க்கையைத் தொடங்கியது ஹிஜ்ரி 2 -ம் ஆண்டில் ஆகும் (கி.பி 624). அந்த நேரத்தில் அன்னாரது வயது 9 ஆக இருந்திருக்குமென்றால் சூரா அல்-கமர் அருளப்பட்ட ஆண்டில் அன்னார் பிறந்திருக்கக் கூட மாட்டார்கள்.

இப்போது மற்ற சில அறிவிப்புகள் கூறுவது போன்று சூரா அல்-கமர் மேற்கூறப்பட்ட ஆண்டிலிருந்து ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அருளப்பட்டது என்று வைத்துக் கொண்டாலும் கூட அப்போது அன்னாரது வயது இரண்டு மட்டுமே ஆகின்றது. இரண்டு வயது குழந்தை இத்தகைய விஷயங்களை நினைவில் வைத்திருக்க சாத்தியமேயில்லை. இது தவிர வேறு சில ஹதீஸ்களும் வரலாற்றுக் குறிப்புகளும் இந்த அறிவிப்பை சந்தேகத்திற்குரியதாக்குகிறது. இவ்விஷயம் தொடர்பாக முன்வைக்கப்படும் இரண்டு பொதுவான கண்ணோட்டங்கள் அன்னார் 6 மற்றும் 9 வயதுடையவராக இருந்தார்கள் என்ற அறிவிப்புகளை மறுக்கின்றன.

## முதல் கண்ணோட்டம்: அன்னாரது வயது குறைந்தபட்சம் 18

பல வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அன்னாரது மூத்த சகோதரி ஹஸ்ரத் அஸ்மாவை விட 10 வயது இளையவர்கள் ஆவார்கள். (Siyar A'lam al-Nubala, vol. 2, p.289 (Beirut: Muassasat-al-Risalah, 1992). தா∴திப் அல் தா∴திப் மற்றும் அல் ∴பிதாயா வல் நிஹாயா என்ற இரண்டு பிரபலமான வரலாற்று நூல்களின் படி ஹஸ்ரத் அஸ்மா அவர்கள் ஹிஜ்ரி 73 -ல் தமது 100 -வது வயதில் மரணமடைந்தார்கள். (Al-Bidaya wa'l-Nihaya, vol. 8, p. 371-372 (Al-jizah: Dar-al-fikr al-arabiyy, 1933).

இந்த அடிப்படையில் பார்க்கும்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் சென்ற போது ஹஸ்ரத் அஸ்மா அவர்களின் வயது 27 அல்லது 28 என்றாகிறது. அப்படியானால் ஹிஜ்ரி 2 -ல் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் திருமணம் நடக்கும்போது ஹஸ்ரத் அஸ்மாவின் வயது 28 அல்லது 29 ஆகும். இவை எல்லாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் திருமணம் செய்து கொண்ட சமயத்தில் அன்னாரின் வயது 18 அல்லது 19 வயது என்பதைத் தெரிவிக்கின்றன.



வரலாற்று ரீதியில் பார்க்கும்போது இந்தக் கண்ணோட்டம் ஒன்பது வருடம் என்ற அறிவிப்பைக் காட்டிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருந்தபோதிலும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வயதைக் குறித்த மிகத் துல்லியமான மதிப்பீடு இதுவே என்று நாம் கூறிவிட முடியாது.

## இரண்டாவது கண்ணோட்டம்:அன்னாரது வயது குறைந்தபட்சம் 14


ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் திருமணம் நிகழ்வுற்ற போது அன்னாரது வயது 14 என்பது மற்றொரு கண்ணோட்டமாகும். இதுவே மிகத் துல்லியமான மதிப்பீடு என்று தெரிய வருகிறது. வரலாற்றிலிருந்து கிடைக்கும் சில சான்றுகள் இந்த கருத்தை உறுதிப்படுத்துகின்றன.

**முதல் சான்று:** வரலாற்றாசிரியர் தபரீ இஸ்லாமிய வரலாறு பற்றிய தமது ஆய்வுத் தொகுப்பில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு 4 குழந்தைகள் உண்டு என்றும் அவர்கள் அனைவரும் இஸ்லாத்திற்கு முந்தைய காலத்தில் பிறந்து விட்டனர் என்றும் கூறியுள்ளார். (Tarikhu'lumam wa'l-muluk, Al-Tabari, Vol 4, Pg 50, Arabic, Dara'l-fikr, Beirut, 1979).

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு முந்தைய காலத்தில் பிறந்தார்கள் என்றால் ஹிஜ்ரி 2 -ம் ஆண்டு அன்னாருக்குத் திருமணம் நடைபெற்றபோது அவர்களின் வயது 14 -ஐ விடக் குறைவாக இருக்க முடியாது.

**இரண்டாம் சான்று:** இப்னு ஹஜர் அல் அக்ஸலானி என்ற வரலாற்று ஆசிரியரின் கருத்துப்படி ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை விட 5 வயது மூத்தவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் பிறந்தபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வயது 35 ஆகும். (Al-Isabah fi Tamyiz al-Sahaba, vol. 8, p. 263).

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது 52 -ம் வயதில் மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்தார்கள். இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வயது ஹிஜ்ரி 2 -ம் ஆண்டின் போது 14 அல்லது 15 ஆகும்.



**மூன்றாம் சான்று:** ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உஹது போரில் கலந்து கொண்டது தொடர்பான ஓர் அறிவிப்பு புகாரியில் கீழ்க்கண்டவாறு இடம் பெற்றுள்ளது.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். உஹது நாளின் போது மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி உறுதியாக நிற்க முடியாமல் போனது. அப்போது நான் பார்த்தேன், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களும் தங்களுக்குத் தடுமாற்றம் ஏற்படாதிருக்க தமது ஆடைகளைப் பாதத்திலிருந்து உயரே தூக்கிக் கொண்டார்கள். (புகாரி கித்தாபுல் ஜிஹாத் வல் ஸியார்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்களை அன்னாரது இளவயது காரணமாக அதே உஹதுப் போரில் பங்கு பெற அனுமதிக்கவில்லை. இது குறித்து இவ்வாறு வருகிறது.

ஹஸ்ரத் இப்னு உமர் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னை உஹது போரில் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை. ஏனெனில் அப்போது எனது வயது 14 ஆக இருந்தது. ஆனால் எனக்கு 15 வயதான போது கந்தாக் போரில் கலந்து கொள்ள ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்கு அனுமதி வழங்கினார்கள். (புகாரி - கிதாபுல் மகாஸி)


எனவே 15 வயதிற்கு குறைவான குழந்தைகள் உஹது போரில் பங்கு பெற அனுமதிக்கப்படவில்லை என்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அதில் பங்கு பெற்றபோது அன்னாரது வயது 15 அல்லது அதை விட அதிகமாக இருந்தது என்றும் தெளிவாகிறது. மேலும் அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தில் ஒருவராக இணைந்த போது அன்னாரின் வயது 14 அல்லது அதை விட அதிமாக இருந்தது என்றும் தெளிவாகிறது.

இந்த அனைத்து சான்றுகளும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை அன்னாரது பருவ வயதிற்கு முன்னதாகவே திருமணம் செய்து கொண்டார்கள் என்ற தவறான கருத்தைத் தூள்தூளாக்கி விடுகின்றன.

**முடிவுரை:** பருவமடைதல் அல்லது பூப்பெய்தலின் வயது பல்வேறு காரணிகளால் மாற்றத்திற்கு உள்ளாகக் கூடியது என்பது ஓர் அறியப்பட்ட உண்மையாகும். அதைப் போன்று திருமணத்திற்குத் தகுதியான வயதும் ஏற்கத்தக்க பல்வேறு வயதுகளாகப் பல்வேறு காலங்களில் வரலாற்றில் கூறப்பட்டு வந்துள்ளது. எந்த காலத்தில் அந்தத் திருமணம் நடந்தது என்பதையும் அந்தக் காலத்தில் இருந்த சமூக நடைமுறைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதை விடுத்து, காழ்ப்புணர்ச்சி கொண்டு ஒரு குறிப்பிட்ட மார்க்கத்தைக் களங்கப்படுத்தும் நோக்கில் அந்த நிகழ்வை மற்றொரு காலத்திற்கும் மற்றொரு கலாச்சாரத்திற்கும் தமது காழ்ப்புணர்ச்சிக்குப் பொருந்தும் வகையில் ஒப்பிட்டுக் கூறுவது சரியல்ல.

உண்மை என்னவெனில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடனான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருமணம் இரு தரப்பினரின் ஒப்புதலுடன் நடந்த மிகவும் பொருத்தமான திருமணமாக இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அப்போது பருவமடைந்தவராக இருந்ததனால் மரபிற்கேற்ப அன்னாரின் பெற்றோரும் இந்தத் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்திருந்தனர். ஏற்கனவே விளக்கப்பட்ட படி அன்னாருக்கு அப்போது 10 வயதைக் காட்டிலும் குறைவாக இருந்தது என்று கூறும் ஹதீஸ்களும் குறிப்புகளும் முற்றிலும் முரண்பாடுகளைக் கொண்டவையாகவும் நம்பகத்தன்மையற்றவையாகவும் உள்ளன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த எந்த ஒரு நபரும் அல்லது அன்னாரின் காலத்தில் இருந்த மிகக் கடுமையான விமர்சனையாளர்களும் கூட அவர்களைப் பல முனைகளில் எதிர்த்து வந்தபோதிலும் இந்த ஆட்சேபனையை ஒருபோதும் எழுப்பியதில்லை. எனவே, இன்றைய கால விமர்சனையாளர்கள் இது போன்ற அறிவற்ற பேச்சுக்களை விட்டு விட்டு அவர்களின் நம்பகத்தன்மை ஏற்றுக் கொள்ளப்படும் விதத்தில் தமது விமர்சனத்தில் கண்ணியத்தைக் கடைபிடிப்பதே அவர்களுக்குச் சிறந்தது.



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

7

## - மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

**தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை**

ஒருமுறை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் திருமண சம்பந்தமான ஒரு வழக்கில் சாட்சியங்களைப் பதிவு செய்யும் கமிஷனராக நியமிக்கப்பட்டார்கள். வழக்கிற்குத் தொடர்புடைய இடத்திற்கு நேரடியாகச் சென்று அவர்கள் விசாரணை நடத்தினார்கள். மீரான் பக்ஷ் என்ற கடைநிலை ஊழியரும் அவர்களோடு உதவிக்குச் சென்றார். அக்காலத்தில் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அதிகாரிகள் தாங்கள் செல்லும் இடங்களில் தமக்கு மட்டுமல்லாமல் தம்மோடு வரும் உதவியாளருக்கும், தம்முடைய வாகனங்களுக்கும் உரிய வசதிகள் செய்து கொடுப்பதை எதிர்பார்த்தனர். ஆனால் அஹ்மது (அலை) அவர்கள் இதுபோன்ற விஷயங்களில் மிகவும் கவனமாக இருந்தார்கள். தாம் செல்லும் இடங்களில் தமக்குத் தேவைப்படும் உணவை மட்டுமல்லாமல், தமது உதவியாளருக்கும். தாம் பயணம் செய்யும் குதிரைக்கும் தேவையான உணவைத் தம்மோடு எடுத்துச் செல்வது அவர்கள் வழக்கம். ஆனால் அவர்கள் தாம் குதிரை மீது அமர்ந்து பயணம் செய்வதை பெரும்பாலும் விரும்பமாட்டார்கள். தமது வழக்கப்படி தமது உதவியாளரை குதிரை மீது அமர்ந்து பயணம் செய்யச் சொல்லி, தாம் நடந்து சென்றார்கள். அவர்கள் தமது உதவியாளரிடம் சாட்சிக்காரர்கள் தரும் அன்பளிப்பு எதையும் பெற்றுக் கொள்ளக் கூடாது என்று கட்டளை இட்டிருந்தார்கள். நாகரிகத்தில் மிகவும் முன்னேறியவர்களாகக் கருதப்படும் மேற்கத்திய சமுதாயத்தில் கூடக் காணப்படாத ஒரு பரிவைத் தமது முதல் செயலில் காண்பித்தார்கள். அதிகாரிகள் இலஞ்ச லாவண்யத்திற்கும், பணம் பறிக்கும் இழிசெயலுக்கும் அப்பாற்பட்டவர்களாக இருந்து தம் மீது சுமத்தப்பட்ட பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதைத் தமது இரண்டாவது செய்கையில் வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

வாழ்க்கையில் எதுவும் அவர்களை முடங்கிப்போகச் செய்ததில்லை. அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாகவே இருந்தார்கள். அவர்களின் கண்கள் ஆன்மீக ஆனந்தம் என்னும் ஒளியால் எப்போதும் நிறைந்து காணப்பட்டது. இந்த ஒளி வாழ்வின் அனைத்து அம்சங்களையும் ஒளிமயமாகவும் அழகாகவும் பிரகாசிக்கச் செய்தது. அது குளிர்ச்சியை வெதுவெதுப்பாக்கியது; துன்பத்தில் ஆறுதல் தந்தது. அறியாமையை ஒளிமயமாக்கியது. வருத்தத்தை மகிழ்ச்சியாக்கியது. ஆனால் பொய், சுயநலம், கொடுமை ஆகியவற்றிற்கெதிராகக் குரல் எழுப்பினார்கள். நல்லதை நாடும் ஒருவர், தீயதையும் தீயது செய்வோரையும் கண்டு கவனமற்றவராக இருக்க முடியாதல்லவா? தம் எஜமானரான அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எவராவது அவமரியாதை செய்வதை மட்டும் அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. அதற்காக அந்த இடத்தில் கூச்சல் போட்டு கூட்டத்தைக் கூட்டுவார்கள் என்பது பொருளல்ல. மாறாக மனித இனத்தின் மாபெரும் அருளாளராகத் தோன்றிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மதிக்கத் தெரியாத மக்கள் இருக்கும் இடத்தை விட்டு அமைதியாக அகன்று சென்று விடுவார்கள்.

அந்தக் காலத்தில் இந்தியாவின் பத்திரிகைத் துறை அவ்வளவு பலம் வாய்ந்ததாக இருக்கவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பின்வரும் பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்தி தொடர்ந்து படித்து வந்தார்கள்.


1. அமிர்தசரஸிலிருந்து வெளிவந்த 'ஸ.'.பீர்'
2. அக்னிஹோத்ரியின் 'ஹிந்து பந்து'
3. மன்ஸூரே முஹம்மதீ

இவற்றுள் கடைசியாகக் கூறப்பட்ட பத்திரிகைக்கு அவர்கள் அவ்வப்போது கட்டுரைகள் அனுப்பி வந்தார்கள். தம் வாழ்நாளின் பிற்காலத்தில் அவர்கள் லாஹூரிலிருந்து வெளிவந்த 'அக்பாரே ஆம்' என்ற பத்திரிகையையும் வாசித்து வந்தார்கள்.

ஒருமுறை கபூர்தலா சமஸ்தான கல்வித் துறையில் நல்ல சம்பளத்துடன் கூடிய கண்ணியமிக்க ஒரு பதவிக்கான அழைப்பு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைத் தேடி வந்தது. ஆனால் அவர்கள் அந்தப் பதவியை ஏற்கவில்லை. அவர்களுடைய தந்தையார் அதற்கான காரணத்தை வினவிய போது, அவர்கள் தாம் உலக விஷயங்களில் சிக்கிக் கொள்ள விரும்பவில்லை என்றும், தமது தேவையெல்லாம் இரண்டு கதர் ஆடைகளும் கொஞ்சம் உணவுமேயாகும் என்று பதிலளித்தார்கள். இந்தப் பதிலைக் கேட்டு அவர்களின் தந்தையார் மிகவும் பெருமிதம் அடைந்தார்கள். மேலும் அவர்

தம்முடைய நண்பரான குலாம் நபி என்பவரிடம், தாம் ஒரு தந்தை என்ற விதத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்காகக் கவலைப்பட்டாலும், அவர்கள் இப்படிப்பட்ட எளிய நேர்மையான வாழ்வு வாழ்வது சரியானதாகவே தாம் கருதுவதாகக் கூறினார்.

ஒருமுறை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு செசன்ஸ் நீதிமன்றத்தில் நடுவராக நியமிக்கப்பட்டார்கள். ஆனால் அந்தப் பணியையும் ஏற்றுக் கொள்ள அவர்கள் மறுத்து விட்டார்கள். ஒருமுறை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தந்தையார் ஹஸ்ரத் அவர்களை அழைத்து வருவதற்காகத் தம்மை அனுப்பியதாக காதியானுக்குப் பக்கத்திலுள்ள கல்வான் கிராமத்தைச் சேர்ந்த ஜண்டாசிங் என்பவர் கூறுகிறார். அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை ஒரு வேலையில் சேர சம்மதமா என அன்னாரின் தந்தையார் வினவினார். அதற்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தாம் ஏற்கனவே ஒரு பணியில் சேர்ந்து விட்டதாகப் பதில் கூறினார்கள். தாம் இறைப் பணிக்காகத் தம்மை ஏற்கனவே அர்ப்பணித்து விட்டதையும் வேறு உலகியல் பணியில் எதிலும் சேர தமக்கு விருப்பமில்லை என்பதையுமே இவ்வாறு கூறினார்கள்.



கற்பனை வளத்தின் ஊற்றாகவும் ஆற்றலின் வெளிப்பாடாகவும், மனித இனத்தின் முன்னேற்றத்திற்கான மாபெரும் சக்தியாகவும் விளங்குவது கவிதை. எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் நேர்மை, மனசாட்சி, ஆன்மீக உருக்கம் ஆகியவை கவிதைகளாக வெளிப்பட்டன. அவர்களின் உள்ளத்தில் பெருக்கெடுத்த ஆன்மீக உணர்வுகள் கவிதைகளாக வெளிவந்தன. பணம் சம்பாதிக்கும் நோக்கத்திற்காகவோ அவர்கள் கவிதை எழுதவில்லை. உருதுவிலும், பாரசீக மொழியிலும் கவிதை எழுதுவார்கள் என்ற செய்தியே பல காலம் வெளியுலகுக்குத் தெரியாமல் இருந்து வந்தது, விளம்பரத்தைத் தவிர்த்து வந்தார்கள். கவிதை எழுதும் பொழுது அதிலுள்ள உருக்கத்தால் அவர்களின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்கும். அக்காலங்களில் அவர்கள் எழுதிய பாரசீக கவிதைகள் அவர்களின் மரணத்திற்குப் பின்பே நூலாக வெளி வந்தன. அந்த நூல்தான் 'துர்ரே மக்னூன்' என்பதாகும். அவர்களின் கவிதைகளின் சிறப்புகள் தனியான ஒரு அத்தியாயத்தில் பின்னர் விவரிக்கப்படும்.

அவர்களுடைய எண்ணங்களையும், உணர்வுகளையும் தெரிந்து கொள்வதற்காக, அவர்கள் பாரசீக மொழியில் எழுதிய கடிதத்தின் மொழியாக்கம் இங்கு தரப்படுகிறது. அது அவர்கள் தம் தந்தையாருக்கு எழுதியதாகும். அக்கடிதத்தில் கையெழுத்தோ தேதியோ இல்லை. எனவே அது அவர்களின் தந்தையாரிடம் கொடுக்கப்பட்டதா? இல்லையா என்று உறுதியாகக் கூற முடியவில்லை. ஆனாலும் அக்கடிதத்தின் பொருளடக்கத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது.

“மரியாதைக்குரிய தந்தையார் அவர்களே! தாங்கள் சாந்தியோடும் சமாதானத்தோடும் நீண்ட காலம் வாழ்வீர்களாக! என்னைச் சுற்றி நாட்டிலும் நகரத்திலும் நான் காண்பதெல்லாம் ஒரு பேரபாயமே! நண்பர்களை விட்டு நண்பர்களையும், உறவினர்களை விட்டு உறவினர்களையும் அது பிரித்தாள்கிறது. இந்த உலகத்தைத் துன்பத்தில் ஆழ்த்தும் துயரம் எதுவும் நிகழாத ஆண்டெதுவும் இல்லை. இதன் காரணமாக என்னுள்ளத்தில் என்னைச் சுற்றியிருப்பவற்றின் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது. நான் பயத்தால் வெளிறிப் போய் இருக்கிறேன். அடிக்கடி ஷேக் முஸ்லிஹுத்தீன் சஅதி ஷிராஸி அவர்களின் கவிதை வரிகளைப் படித்துத் துன்பத்தாலும் வேதனையாலும் கண்ணீர் வடிக்கிறேன். ஃபர்ரூக் காதியானி அவர்களின் வரிகளும் என்னுள்ளத்தைத் துயரத்தில் ஆழ்த்துகின்றன.

“எனவே நான் எனது எஞ்சிய வாழ்நாட்களைத் தனிமையில் கழிக்கவே விரும்புகிறேன். மனிதர்களின் கூட்டத்தை விட்டு விலகி இறைதியானத்தில் செலவிட விரும்புகிறேன். ஒருக்கால் இதன் மூலம் நான் ஏற்கனவே இழந்து விட்ட நாட்களை ஈடுகட்டவும், கடந்த கால வாழ்க்கைக்கு பிராயசித்தம் தேடவும் முடியும் என்று கருதுகிறேன்.

இவ்வுலகில் எதுவும் நிலையானதல்ல; அனைத்தும் கடந்து செல்லக் கூடியதே!”

இஸ்லாம் துறவறத்தை அனுமதிக்கவில்லை. ஆனால் ஆன்மீக உன்னதத்தை எய்துவதற்கு நோன்பை ஒரு வழியாக அது கூறுகிறது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். அதில் இறையருளைப் பின்பற்றி அன்னாரும் சில நோன்புகளை நோற்குமாறு மலக்குகள் அவருக்கு அறிவுரை கூறுவதாகக் கண்டார்கள். எனவே அவர்கள் அந்த நோன்புகளை இரகசியமாக நோற்கத் தீர்மானித்தார்கள். அந்நாட்களில் அவர்கள் தமது வீட்டின் முற்றத்திற்குக் கிழக்குப் பக்கமாக அமைந்திருந்த மாடி அறையில் இருந்து வந்தார்கள். தமது உணவை அந்த அறைக்கே கொண்டு வரும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். ஏற்கனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி அங்கு வரும் உணவை ஏழை, அனாதை குழந்தைகளை வரவழைத்து அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விடுவார்கள். இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு தமது உணவைச் சிறிது சிறிதாகக்

குறைக்க நாடினார்கள். பிறகு 24 மணி நேரத்தில் ஒரு முறை மட்டும் ஒரு சிறு ரொட்டித் துண்டை மட்டும் உண்டு உயிர் வாழப் பழக்கப்படுத்திக் கொண்டார்கள். இந்த முறையில், தொடர்ச்சியாக எட்டு, ஒன்பது மாதங்கள் வரை அவர்கள் நோன்பு நோற்று வந்தார்கள். இதன் மூலம் அவர்களுக்கு ஆன்மீக அரசின் வாசல்கள் திறந்தன. அற்புதமான ஆன்மீகக் காட்சிகளைக் கண்டார்கள். முன்னர் சென்று போன பல நபிமார்களுடனும், ஆன்மீகப் பெரியவர்களுடனும் உரையாடினார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட இறையடியார்கள் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய பல அனுபவங்களைப் பெற்றார்கள்.

இருந்த போதிலும் சாதாரண மக்கள் இதுபோன்ற கஷ்டங்களைத் தம்மீது சுமத்திக் கொள்வது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்பது அவர்கள் கருத்தாகும். ஏனென்றால் இது போன்று தாமே ஏற்படுத்திக் கொள்ளும் கஷ்டங்களினால் சிலர் புத்தி பேதலித்துப் போவார்கள்; அல்லது உயிருக்கே ஆபத்தாய் முடியும் நோய்களை வரவழைத்துக் கொள்வார்கள்.

சாதாரணமாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மக்களுடன் கூட்டத்தோடு கூட்டமாக இருக்க விரும்பமாட்டார்கள். ஆனால் ஆன்மீகப் பெரியவர்களைச் சந்திப்பதில் எப்போதும் ஆர்வம் காட்டி வந்தார்கள். ஆப்கானிஸ்தானிலுள்ள கஸ்னியைச் சேர்ந்த மவ்லவி அப்துல்லாஹ் அவர்கள் புகழ்பெற்ற ஓர் ஆன்மீகப் பெரியவர் ஆவார். அவர் தமது சொந்த நாட்டில் மத வெறியர்களால் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டார். மார்க்கத்தை விட்டு வெளியேறி விட்டவர் என்று அறிவிக்கப்பட்டு கஸ்னியை விட்டே வெளியேற்றப்பட்டார். அவர் அமிர்தசரஸுக்கு அருகில் வசித்து வந்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இரண்டு முறை இந்த ஆன்மீகப் பெரியவரைச் சென்று சந்தித்தார்கள். இவ்வாறு போகும் பொழுது சில பரிசுப் பொருட்களையும் எடுத்துச் சென்றார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அந்தப் பெரியவரைச் சென்று சந்தித்ததற்கான நோக்கம் தமது சொந்த நலத்திற்காகவோ, சந்தோஷத்திற்காகவோ இல்லை. மாறாக இஸ்லாத்தின் நலத்திற்காக துஆச் செய்யும்படிக் கேட்டுக் கொள்வதற்காகவே!

ஒருமுறை கைர்தீ என்ற இடத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அன்னாரைச் சந்தித்து துஆவுக்காக வேண்டுகோள் விடுத்தார்கள். அப்பொழுது மவ்லவி அப்துல்லாஹ் அவர்கள் துஆச் செய்வதற்காக நண்பகல் வெயிலில் தம் வீட்டிற்குச் சென்று துஆச் செய்தார்கள். அப்போது அவர்கள், "நீயே எங்கள் எஜமான்; ஆகவே நிராகரிக்கும் கூட்டத்தினர்க்கு எதிராக நீ எங்களுக்கு உதவி புரிவாயாக!" (திருக்குர்ஆன் 2:287) என்ற இறையறிவிப்பைப் பெற்றார்கள். ளுஹர் தொழுகை நேரத்தில் தம் வீட்டிலிருந்து திரும்பி வந்து, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம், தாம் ஓர் இறையறிவிப்பைப் பெற்றதாகவும் அதன் பொருள், இறைவன் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களுக்கு உதவி செய்தது போல் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கும் உதவி செய்வான் என்றும் தம் தாய் மொழியான பாரசீக மொழியில் கூறினார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் காதியான் சென்று சேர்ந்த பின் ஒரு கடிதம் மூலம் இதனை உறுதி செய்தார்.

இதே போன்று இன்னோர் ஆன்மீகப் பெரியவர் இருந்தார். அவரது பெயர் ஷர்ஃபுத்தீன். அவர் குர்தாஸ்பூர் மாவட்டத்திலுள்ள தலப்பூர் என்ற ஊருக்கு அருகில் இருந்த ஸாம் என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவரையும் இதே நோக்கத்திற்காகச் சந்தித்தார்கள்.

1874 -ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஏழு வயது நிரம்பிய ஓர் அழகிய சிறுவனை கண்டார்கள். அந்தக் கனவில் அந்தச் சிறுவனை ஒரு மலக்காகவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கண்டார்கள். அவன் ஓர் உயரமான மேடையின் மீது அமர்ந்திருந்தான். அந்த மேடை மூடப்பட்டிருந்தது. அந்தச் சிறுவன் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு சுவையான, பார்ப்பதற்கு அழகான ரொட்டி ஒன்றை



அளித்தான். அது சாதாரண ரொட்டியை விட நான்கு மடங்கு பெரியதாக இருந்தது. அதனை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் வழங்கிய போது அந்தச் சிறுவன், இதனை எடுத்துக் கொள்ளுங்கள். இது உங்களுக்கும் உங்களோடு இருக்கும் தர்வேஷ்களுக்கும் ஆகும் என்று கூறினான். ரொட்டி என்பது உயிர் வாழ்வின் அடையாளமாக இருப்பதால் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கனவாகும். எப்போதும் போலவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது உணவை மற்றவர்களோடு பகிர்ந்து உண்டு வந்தார்கள். அதன் பின்பும் பல காலம் அவ்வாறே செய்து வந்தார்கள். இதுவே பிற்காலத்தில் அவர்கள் தம்மைக் காண காதியான் வருபவர்கள் அனைவரும் உணவு அருந்துவதற்காக ஏற்படுத்திய லங்கர் கானாவாக உருவாகியது. உண்மையிலேயே, இது 'இன்றைய நாளின் உணவை எங்களுக்குத் தாரும்!' என்ற பிரார்த்தனையின் நிறைவேற்றம் ஆகும். உண்மையில் இது விண்ணில் இறைவனின் ஆட்சி நிலவுவது போல் பூமியிலும் ஏற்பட்டதின் ஓர் அடையாளமே ஆகும். மனித இனத்தைத் தீமையிலிருந்து

விடுவிப்பதற்காகவே இறைகட்டளையின் -படி காதியானில் லங்கர் கானா ஏற்படுத்தப்பட்டது. என்னைப் பொருத்த வரையில் ஈஸா (அலை) அவர்கள் செய்த பிரார்த்தனையாகத் திருக் -குர்ஆனில் பதிவு பெற்றுள்ள பின்வரும் திருமறை வசனத்தின் வெளிப்பாடாகவே தெரிகின்றது.

"(இதற்கு) மர்யமின் மகன் ஈஸா, அல்லாஹ்வே! எங்களுள் முன்னவர்க் -கும், எங்களுள் பின்னவர்க்கும் பெருநாளாக (அமைவதற்காக)வும், உன்னிடமிருந்துள்ள ஓர் அடையாள -மாகவும் இருக்கக் கூடிய (உணவுகள் நிரம்பிய) தட்டை வானிலிருந்து எங்களுக்காக இறக்கி வைப்பாயாக! நீ (உன்னிடமிருந்து) எங்களுக்கு உணவளிப்பாயாக. உணவளிப்பவர் -களில் சிறந்தவன் நீயே என்று கூறினார்." (5:115)



1876 -ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் லாஹுரில் இருந்த பொழுது ஒரு கனவு கண்டார்கள். அதன் மூலம் தந்தையாரின் இறுதி நேரம் நெருங்கி விட்டதாக உணர்ந்து கொண்டார்கள். எனவே அவர்கள் காதியானுக்கு விரைந்தார்கள். அங்கு அவர்களின் தந்தையார் நோயுற்றவரைப் போல் காணப்படாவிட்டாலும், வயிற்றுப்போக்கு நோயால் அவதிப்பட்டு வந்தார்கள்.

மறுநாள் அக்கால வழக்கப்படி குடும்பத்தினர் அனைவரும் அன்னாரைப் பார்ப்பதற்காக அங்கு கூடி விட்டனர். அது வெப்பம் மிகுந்த நாளாக இருந்தது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தந்தையார் அவர்களிடம் நீண்ட நேரம் பணிவிடை செய்து விட்டதால் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளும்படிக் கூறினார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மாடியில் இருந்த தமது அறையில் ஓய்வெடுக்கச் சென்றார்கள். அந்நேரம் அவர்களின் தந்தையின் உடல் நிலையில் கவலைப்பட வேண்டிய எந்த அம்சமும் காணப்படவில்லை. ஆனால் அவர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் நேரத்தில், அவர்களுக்கு அரபியில் ஓர் இறையறிவிப்பு வந்தது. அதில் அவர்களுடைய தந்தையார் அன்று மாலை சூரிய மறைவிற்குப் பின் இறந்து விடுவார் என்ற குறிப்பு காணப்பட்டது. உண்மையிலேயே அந்தச் செய்தி மிகுந்த துன்பத்தைத் தருவதாக அமைந்திருந்தது. அதனால் அவர்கள் மிகுந்த வேதனை அடைந்தார்கள். தமது தந்தையின் மரணத்திற்குப் பின் தாம் எவ்வாறு காலம் கழிக்கப் போகிறோம் என்ற சிந்தனையும் அவர்கள் உள்ளத்தில் தோன்றியது. இந்நிலையில் அவர்களுக்கு மீண்டும் ஒரு இறையறிவிப்புக் கிடைத்தது. அது அவர்களுக்கு முற்றிலும் ஆறுதல் அளிப்பதாகவும், அவர்களுடைய அச்சத்தை அகற்றுவதாகவும் அமைந்திருந்தது. இந்தச் செய்தி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வார்த்தைகளிலேயே சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் எழுதுகிறார்கள்:

"எனது தந்தையார் சூரிய மறைவிற்குப் பின் இறந்து விடுவார்கள் என்ற செய்தி மனிதனுக்கே உரிய துன்பப் பேரிடியை என்னுள் ஏற்படுத் -தியது. ஏனென்றால் குடும்பத்தின் வருமானத்திற்கான பல காரணிகள் எம் தந்தையாரின் வாழ்வோடு தொடர் -புடையவையாக இருந்தன. உதாரணமாக ஓய்வூதியம், நற்பணி ஆற்றியமைக்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வந்த மானியம் ஆகியவை. என் தந்தையின் மரணத்திற்குப்பின் என்னவாகும் என்ற எண்ணம் என் மனதில் ஒரு வினாடி ஊசலாடியது. வறுமையும் துன்பமும் நிறைந்த நாட்கள் வரவிருக்கின்றன என்ன எண்ணம் என் மனதில் தோன்றியது. இந்த எண்ணங்கள் எல்லாம் என் மனதில் ஒரு மின்னலைப்போல் கடந்து சென்றன. அப்போது எனக்கு ஒரு மெய்மறந்த நிலை ஏற்பட்டது. அந்நிலையில் எனக்கு இரண்டாவது இறையறிவிப்புக் கிடைத்தது.

"அலைஸல்லாஹு பி கா∴பின் அப்தஹு - அல்லாஹ் தன் அடியானுக்கு போதுமானவன் இல்லையா?"

இந்த இறை அறிவிப்பைத் தொடர்ந்து மனதுக்கு ஓர் ஆறுதல் ஏற்பட்டது. வெதனை அளித்துக் கொண்டிருக்கும் ஒரு புண், ஆற்றல்மிக்க ஒரு களிம்பால் உடனடியாக ஆறிவிட்டதைப் போன்ற நிம்மதி கிடைத்தது. இந்த இறையறிவிப்புக் கிடைத்தவுடன் இறைவன் ஒருநாளும் என்னைக் கைவிட மாட்டான் என்று உணர்ந்தேன். பிறகு நான் அந்த இறையறிவிப்பை எழுதி காதியானில் வாழந்து வரும் ஹிந்து கத்ரி இனத்தைச் சேர்ந்த மலாவாமால் என்பவரிடம் கொடுத்தேன். அவர் இன்றும் வாழ்ந்து வருகிறார். அவரிடம் நடந்த சம்பவம் அனைத்தையும் விவரித்துக் கூறினேன். அவரை கலானூரைச் சேர்ந்த ஹகீம் மவ்லவி முஹம்மது ஷரீ∴ப் என்பவருடன் அமிர்தசரஸுக்கு அனுப்பி வைத்து, அந்த இறையறிவிப்பை ஒரு கல்லில் பதித்து ஒரு முத்திரையாகச் செய்து கொண்டுவரும்படிக் கூறினேன். நான் இந்த வேலைக்கு ஒரு ஹிந்துவை தேர்ந்தெடுத்த காரணம், அவரையும் அவருடன் சென்ற மவ்லவி முஹம்மது ஷரீ∴ப் அவர்களையும் மகத்தான இந்த முன்னறிவிப்புக்குச் சாட்சிகளாக்கும் பொருட்டுதான். குறிப்பிட்ட காலத்தில் மவ்லவி முஹம்மது ஷரீ∴ப் ஐந்து ரூபாய் மதிப்பில் இந்த இலச்சினையைச் செய்து எனக்கு அனுப்பி வைத்தார். இன்றும் அது என் வசம் உள்ளது."

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குக் கிடைத்த முன்னறிவிப்பின்படியே அன்னாரின் தந்தை அன்று சூரிய மறைவிற்குப்பின் வ∴பாத் ஆனார்கள். அவரின் மூத்த மகனான மிர்ஸா குலாம் காதிர் குடும்பத்தின் தலைவர் ஆனார்.

(தொடரும்...)






## ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது**

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

அடுத்து பெனினுடைய ஒரு சம்பவம்: இடையில் 3, 4 நாடுகளுக்கான இடைவெளி உள்ளது. இந்த நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கிடையே எந்தவொரு தொடர்பும் கிடையாது. இரு நாட்டு மக்களும் ஒருவர் மற்றவரை அறியமாட்டார்கள். ஆனால் துஆக்களின் காட்சிகளை அல்லாஹ் எல்லா இடங்களிலும் காட்டிக் கொடுக்கிறான். புதிய அஹ்மதி ஒருவர் உள்ளார். அவர் கூறுகிறார்: அந்த கிராமத்தில் Secondary School உடைய தேர்வுக்காக மூன்று பிள்ளைகள்தான் தகுதி பெற்றார்கள். அந்த மூன்று பேரும் அஹ்மதியாக இருந்தார்கள். அங்கு கிராமத்தில் பெரிய அளவில் படிப்பு ஒன்றும் கிடையாது. அடுத்து நடக்க இருக்கும் Board Exam –ல் தேர்ச்சி பெறுவார்களா? இல்லையா? என்பதைக் கூட உறுதியாக சொல்ல முடியாது. அவர் எனக்கு கடிதம் எழுதினார். துஆ செய்யுங்கள். பரீட்சை உள்ளது. ஆனால் படிப்பிற்கான சிறப்பு ஏற்பாடு எங்களுடைய கிராமத்தில் இல்லை. நாங்கள் புதிதாக பைஅத் செய்துள்ளோம். கிராமத்தில் முழு ஸ்கூலிலும் மூன்று பிள்ளைகள்தான் தேர்ச்சி பெற்றுள்ளோம். மற்ற அனைவரும் ரிஜெக்ட் ஆகி விட்டனர். நல்ல மதிப்பெண்கள் எடுத்து பாஸாக வேண்டும்! துஆ செய்யுங்கள்.

நல்ல மதிப்பெண்கள் என்ன! பாஸ் ஆனாலே பெரும் விஷயம்தான்! என்று எழுதியிருந்தார்கள். அதற்கு நான் பதில் அனுப்பி இருந்தேன். அந்தப் பிள்ளைகள் வெற்றியடைய துஆ செய்ததாக பதில் அனுப்பப்பட்டது. அவர் கூறுகிறார்: இந்தக் கடிதம் எங்களுக்கு கிடைத்த போது, நிச்சயமாக அல்லாஹ் அருள் செய்வான்; மூன்று பேரும் பாஸ் ஆகி விடுவோம் என்று எங்கள் பிள்ளைகளுக்கு நம்பிக்கை வந்து விட்டது. போர்டு உடைய ரிசல்ட் வந்த போது அவர்கள் பாஸ் ஆனது மட்டுமின்றி நல்ல மதிப்பெண்கள் எடுத்தும் பாஸாகி இருந்தார்கள். அவர் கூறுகிறார்: அதன் பிறகு அல்லாஹ்வின் மீது எங்களது உறுதியும் ஈமானும் அதிகமாகி விட்டது.

பிறகு இன்னொரு சம்பவம்: இது கேம்பியாவில் நடந்ததாகும். இங்கு உமர் சாஹிப் என்ற நண்பர் ஒருவர் உள்ளார். அவர் குடும்பத்துடன் 2017 –ஆம் ஆண்டு பைஅத் செய்தார். அவருடைய மனைவிக்கு யூட்ரஸ் உடைய கேன்சர் இருந்தது. அதாவது கர்ப்பப்பை புற்றுநோய். ஏழு வருடங்களுக்கு முன்பு அவர்களுக்கு மகள் பிறந்தாள். அதன் பிறகு கேன்சர் வந்து விட்டது. இதற்கு எந்த மருத்துவமும் இல்லை என்று டாக்டர்கள் கூறி விட்டனர். இனி குழந்தைகள் பிறப்பதற்கு வாய்ப்பே இல்லை என்று கூறி விட்டனர். இதன் காரணமாக அவருடைய மனைவி பெரும் கவலையில் இருந்தார்கள். ஒருபுறம் நோய் இருந்தது. இன்னொரு புறம் இனிமேல் குழந்தை பிறக்க முடியாத நிலை இருந்தது. வாழ்வு மற்றும் மரணத்தின் நிலையாக இருந்தது. இனி எந்த அளவு வாழ்வு உள்ளது என்று தெரியவில்லை! சிறு குழந்தை இருக்கிறாள். அவளது வாழ்வினுடைய மகிழ்ச்சிகளைக் காண முடியுமா? இல்லையா என்பது தெரியாது. எவ்வாறிருப்பினும், பைஅத் செய்த பிறகு அவருடைய மனைவி ஒரு Leaflet –ஐ எடுத்தார்கள். அதில் என்னுடைய புகைப்படம் இருந்தது. கூறுகிறார்கள்: அந்தப் புகைப்படத்தைப் பார்த்தவுடன் உள்ளத்திற்கு ஓர் அமைதி கிடைத்தது. நான் அல்லாஹ்விடம் துஆவும் செய்து கொண்டிருந்தேன். மேற்கொண்டு மன நிம்மதி கிடைப்பதற்கும் வேண்டிக் கொண்டிருந்தேன். பிறகு அவர்கள் எனக்கு கடிதம் எழுதினார்கள். தன்னுடைய நோயைக் குறித்தும், சந்ததி பிறப்பதற்கும் துஆவுக்கு விண்ணப்பம் செய்தவாறு எழுதியிருந்தார்கள். அல்லாஹ்வின் அருள் எவ்வாறு கிடைத்தது என்றால், கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவர்கள் கர்ப்பம் அடைந்தார்கள். டாக்டர்களும் நர்ஸ்களும் பரிசோதித்துப் பார்த்தபோது அவர்கள் வியப்படைந்து விட்டனர். இந்தப் பெண்ணிற்கு மருத்துவ ரீதியாக குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பே

இல்லாமல் இருந்தது; சாத்தியமே இல்லை என்று கூறினோமே! என்றார்கள். கர்ப்பம் குறித்து செக்அப் செய்த பிறகு, கேன்சரைப் பற்றி செக்அப் செய்த போது, அங்கு நெகட்டிவ் என்று வந்தது. அதைக் கண்டு டாக்டர்கள் மிகவும் வியப்படைந்திருந்தனர். டாக்டர்கள் அந்தப் பெண்மணியிடம், நீங்கள் என்ன மருந்து பயன்படுத்தினீர்கள்? உங்களுடைய கேன்சரும் போய் விட்டது; உங்களுடைய அனைத்து துயரங்களும் கஷ்டங்களும் போய்விட்டன. மருத்துவ ரீதியாக இது சாத்தியமில்லை என்று நாங்கள் நினைத்திருந்தோம் என்று கூறினர். அதற்கு அந்தப் பெண்மணி, நான் எந்த மருந்தும் பயன்படுத்தவில்லை. நான் காலத்தின் கலீஃபாவுக்கு துஆவுக்காக எழுதியிருந்தேன்; நானும் துஆ செய்து கொண்டிருந்தேன். இதை துஆக்களின் அருளே ஆகும். இதுதான் எனது மருத்துவமுறை ஆகும். இதன் காரணமாக அல்லாஹ் என் மீது அருளை இறக்கினான் என்று கூறினாள்.




கபாபீரைச் சேர்ந்த ஒரு பெண்மணி உடைய சம்பவம்: ஆறு முறை எனது கரு கலைந்து இருந்தது. டாக்டர்கள் எனது நிலையை அசாதாரண நிலை என்று கூறியிருந்தனர். குழந்தை பிறப்பதற்கான எந்த சாத்தியமும் தென்படவில்லை. அந்தக் காலகட்டத்தில் இந்தப் பெண்மணியின் கணவர் இங்கு இலண்டனுக்கு வந்திருந்தார். அவர் என்னைச் சந்தித்தார். அவர் எல்லா நிலையையும் எடுத்துக் கூறினார். துஆவுக்காக விண்ணப்பித்தார். அல்லாஹ் அருள் செய்வான் என்றும், இன்ஷா அல்லாஹ் கரு நிலைத்திருக்கும்; குழந்தையும் பிறக்கும் என்றும் நான் கூறியிருந்தேன். ஆகவே கொஞ்ச காலத்திற்குப் பிறகு கரு நிலைத்து விட்டது. அல்லாஹ் ஒரு பெண் குழந்தையை அவர்களுக்கு வழங்கினான். இத்துடன் அல்லாஹ் உடைய அருள் முடிவுறவில்லை. மாறாக, மகள் பிறந்த பிறகு ஒரு மகனையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான்.

அடுத்தது: இந்தியாவில் பெங்கால் மாநிலத்தில் மால்டாவில் இருக்கக்கூடிய ஒரு முஅல்லிம் சாஹிப் உடைய கிட்னியில் பிரச்சனை ஏற்பட்டு விட்டது. இது 2005 –ஆம் ஆண்டு நடந்த சம்பவம் ஆகும். டாக்டர்கள் மருத்துவம் செய்ய முயற்சித்தனர். ஆனால் எந்த ஒரு வழியும் பிறக்கவில்லை. இனி ஒன்றும் செய்ய முடியாது என மருத்துவர்கள் கூறிவிட்டனர். 2005 –ஆம் ஆண்டு நான் காதியான் சென்றபோது அவர் தன் நோயைப் பற்றி குறிப்பிட்டு துஆக்காக விண்ணப்பம் செய்தார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவர் மீண்டும் செக்அப் செய்வதற்காக ஹாஸ்பிட்டல் சென்ற போது, கிட்னி அசாதாரண முறையில் சரியாகி இருந்தது; அதைக் கண்டு டாக்டர்கள் வியப்படைந்தனர். அதன் பிறகு அல்லாஹ்வின் அருளால் அவர் முற்றிலும் நலமுடன் இருக்கின்றார். இது துஆக்களைக் குறித்து அல்லாஹ் உடைய அருள்களாகும். சாத்தியமில்லாததையும் சாத்தியமாக மாற்றி விடுகின்றது.

அடுத்ததாக, பிரான்ஸில் வசிக்கும் ஒரு நபருடைய சம்பவம்: அவர் கூறுகிறார். நான் வசிக்கக்கூடிய பகுதியில் எந்தவோர் அஹ்மதியும் கிடையாது. 2016 –ஆம் ஆண்டு அவர் பைஅத் செய்தார். அவர் கூறுகிறார்: சிறு வயதில் எட்டு அல்லது ஒன்பது வயதாக இருக்கும்போது ஒரு புத்தகத்தை நான் படித்தேன். அதன் பெயர் மஸீஹ் தஜ்ஜால் என்பதாகும். அந்த நூலில் மூன்று கூட்டங்களைப் பற்றி கூறப்பட்டிருந்தது; வெற்றி பெறக் கூடியவர்கள், கோழைகள் மற்றும் உயிர்த் தியாகம் செய்யக் கூடியவர்கள். அப்போது நான் இறைவனிடம், இறைவா! என்னை வெற்றி பெறக்கூடியவர்களுடன் இணைப்பாயாக என்று துஆ செய்தேன். கொஞ்ச காலத்திற்குப் பிறகு இவர் ஓர் அரபு நாட்டிலிருந்து ஹிஜ்ரத் செய்து ஃபிரான்ஸ் வந்து விட்டார். அவர் கூறுகிறார்: இங்கு ஒரு டிவி சேனலை நான் பார்த்தேன். அதன் மூலமாக ஜமாஅத்தின் அறிமுகம் கிடைத்தது.

அவர் M.T.A பார்த்திருப்பார். பிறகு அவர் அதை பார்க்க ஆரம்பித்தார். ஜமாஅத்தின் உண்மையை ஒப்புக் கொண்டார். ஆனால் பைஅத் செய்யவில்லை.

அவர் கூறுகிறார்: எனக்கு குழந்தைப் பேறு இல்லாமல் இருந்தது. M.T.A –வில் ஒளிபரப்பாகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களை நான் தொடர்ந்து கேட்க ஆரம்பித்தேன். அந்த துஆக்களை நான் சேர்த்து ஓதவும் ஆரம்பித்தேன். எனக்காகவும் நான் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தேன். அந்த துஆக்களின் விளைவாக கொஞ்ச காலத்திற்குப் பிறகு அல்லாஹ் எனக்கு சந்ததியை வழங்கினான். ஆனால் அதற்கு முன்பு டாக்டர்கள், எனக்கு குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறியிருந்தார்கள். அல்லாஹ் இவ்வாறு துஆவை ஒப்புக் கொண்டது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்காக எனக்கு காட்டிய ஓர் அடையாளமே ஆகும்.

அடுத்ததாக ஒரு காதிம் உடைய சம்பவமாகும். அவருக்கு வேலை கிடைக்காததால் மிகவும் கவலையில் இருந்தார். ஒருநாள் மிகவும் கவலையில் இருந்தார்; அவர் அழ ஆரம்பித்தார். எதற்காக அழுதார் என்றால், என்னால் சந்தா கொடுக்க முடியவில்லையே! என்று அழுதார். எவ்வாறிருப்பினும்

அவரைக் கண்ட முபல்லிக் சாஹிப் அவர்கள், நீங்கள் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு தொடர்ந்து கடிதம் எழுதி வாருங்கள்; துஆக்காக எழுதுங்கள் என்று கூறினார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அந்த நபர் மீண்டும் வந்தார். அவர் சந்தா கொடுக்க முடியாமல் இருந்த ஒரு காலமும் இருந்தது. அந்த நிலை எங்கே! இப்பொழுது வந்து, எனக்கு வஸிய்யத் ஃபார்ம் தாருங்கள். நான் வஸிய்யத் செய்ய விரும்புகிறேன் என்று கூறினார். உங்களுக்கு வருமானம் ஒன்றும் இல்லையே! நீங்கள் எவ்வாறு வஸிய்யத் செய்வீர்கள் என்று முபல்லிக் கேட்டார். அதற்கு அந்த நபர், அல்லாஹ் என்னுடைய துஆக்களை ஏற்றுக் கொண்டான். எனக்கு நிரந்தர வேலை ஒன்று கிடைத்து விட்டது. 40,000 francs வருமானம் ஆகும். அதற்கு நான் வஸிய்யத் செய்ய விரும்புகிறேன் என்று கூறினார். அல்லாஹ் துஆக்களை ஏற்றுக் கொண்டவாறு என் மீது அருள் செய்தான். ஆகவே வஸிய்யத் செய்வது அவசியமாகும் என்று கூறினார்.

இவர் இப்பொழுது முறையாக, தொடர்ச்சியாக, கலப்பற்ற தன்மையுடன் சந்தா கொடுக்கக் கூடியவராக இருக்கிறார். ஈமானிலும், நம்பிக்கையிலும் முன்னேறுகிறார். அல்லாஹ்வின் மீது அவருக்கு முன்பை விடவும் அதிமாக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

**பிறகு, Congo Kinshasa உடைய முபல்லிக் எழுதுகிறார்:** நாங்கள் அங்கு நிக்ழச்சியின்போது, கைதிகளுக்கு உணவு விநியோகம் செய்தோம். கைதிகளுக்கு இஸ்லாமிய போதனை குறித்து எடுத்துக் கூறினோம். சில நாட்களுக்குப் பிறகு அந்த நிகழ்ச்சியில் இருந்த ஒரு நபர் மிஷன் ஹவுஸுக்கு வந்து, பைஅத் செய்ய விரும்புகிறேன் என்று கூறினார். நீங்கள் ஏன் பைஅத் செய்ய விரும்புகிறீர்கள்? என்னவாயிற்று? எங்கிருந்து வருகிறீர்கள்? உங்களைப் பற்றி சொல்லுங்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு அந்த நபர், நீங்கள் எந்த ஜெயிலுக்கு வந்தீர்களோ அந்த ஜெயிலில் தான் நானும் இருந்தேன். நான் குற்றம் செய்தவனாக இருந்தேன். என்னுடைய ஒரு தோழன் அந்த குற்றத்தைச் செய்திருந்தான். அவன் ஓடி விட்டான்; என்னைப் பிடித்து ஜெயிலில் போட்டு விட்டனர். ஜெயிலுக்கு நீங்கள் வந்த போது, நிகழ்ச்சிக்குப் பிறகு நீங்கள் துஆ செய்தீர்கள். துஆவின் தத்துவம் குறித்தும் நீங்கள் கூறினீர்கள். அத்துடன் துஆவும் செய்தீர்கள். அதில் நானும் இருந்தேன். அங்கு நான் என்ன துஆ செய்தேன் என்றால், அல்லாஹ்வே! நீ துஆவை கேட்கின்றாய் என்றால், இவர்கள் உண்மையாளர்கள் என்றால் எனக்கு உதவி செய்வாயாக! எனக்கு இங்கிருந்து விடுதலை கொடு! ஏனென்றால் நான் குற்றமற்றவன் என்பதை நீ அறிவாய்.

இந்த ஜமாஅத் உண்மையானது என்றால், அல்லாஹ் எனது இந்த துஆவைக் கண்டிப்பாக ஏற்றுக் கொள்வான் என்று உள்ளத்தில் நினைத்தேன். இந்த விஷயம் எனது உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்து விட்டது. இந்த ஜமாஅத் உண்மையானது என்றால், இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டு விடும்; அல்லாஹ் மறைவிலிருந்து எனது விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்து விடுவான் என்ற நம்பிக்கை எனக்கு வந்து விட்டது. ஆகவே அதுபோலவே நிகழ்ந்தது. குற்றம் செய்து ஓடிப்போன எனது தோழன் திடீரென்று திரும்ப வந்தது மட்டுமின்றி, ஜெயிலில் வந்து எல்லாருக்கும் முன்னால் என்னைக் குறித்து நான் குற்றமற்றவன் என்பதையும் அறிவித்து விட்டான். தான் தான் குற்றவாளி என்று சரணடைந்து விட்டான். உண்மையான குற்றவாளி தான் தான்; இவர் அல்ல என்று கூறி விட்டான். அதன் காரணமாக நான் விடுதலை பெற்று நேராக மிஷன் ஹவுஸுக்கு வந்து விட்டேன் என்று கூறினார். ஜமாஅத்தைக் குறித்து மேற்கொண்டு அவருக்கு அறிமுகம் செய்து வைக்க முயன்ற போது, இந்த ஜமாஅத்தின் உண்மைக்கான ஆதாரத்தை அல்லாஹ்வே எனக்குக் கொடுத்து விட்டான். தன்னுடைய இருப்பு பற்றிய சான்றையும், துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சான்றையும் அல்லாஹ் எடுத்து வைத்து விட்டான் என்று கூறி அப்போதே பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:** "ஆற்றலின் மூலமாக தன் இருப்பு பற்றி அவன் உண்மையான சான்றைக் கொடுக்கின்றான். அடையாளமற்ற அந்த இறைவனின் முகமே இதுதான்!"



இவ்வாறு அல்லாஹ் தன்னுடைய அடையாளங்களைக் காட்டுகின்றான். நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான சம்பவங்கள் உள்ளன. ஒவ்வொரு வருடமும் அவை நிகழ்கின்றன. சிலவற்றை நான் எடுத்துக் கூறினேன்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஈமானிலும், நம்பிக்கையிலும் உறுதியை வழங்குவானாக! துஆ செய்யக் கூடிய வாய்ப்பையும் நமக்கு வழங்குவானாக! நம் துஆக்களையும் ஏற்றுக் கொள்வானாக! இந்த Summit எந்த நோக்கத்திற்காக நடத்தப்படுகின்றதோ – இதை அருளக்குரியதாக அல்லாஹ் ஆக்குவானாக! மக்களுடைய ஈமான் அதிகரிக்கக் காரணமாக இதை ஆக்குவானாக!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

# இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிஸ்ரா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் 20.05.1929 அன்று ஆற்றிய ஈதுல் அழ்ஹா பேருரை



**தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது**

இன்றைய இந்தப் பெருநாள் ஒரு மாபெரும் தியாகத்தை நினைவு கூர்வதற்காகக் கொண்டாடப்படுகிறது. இறைவனால் உருவாக்கப்பட்ட ஜமாஅத்துகளிலும், அவனால் ஏற்படுத்தப்–பட்டுள்ள இயக்கங்களிலும் மார்க்கத்திற்காகத் தமது வாழ்வை முழுமையான முறையில் அர்ப்பணிக்கக் கூடியவர்கள் சிலர் இருக்க வேண்டும் என்ற அந்த சம்பவத்தை நினைவூட்டுவதற்–காகவே இந்தப் பெருநாள் வருகிறது. உண்மையிலேயே தன் குழந்தையை அறுத்துப் பலியிட வேண்டும் என அல்லாஹ் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்குக் கட்டளையிட்டான் என்பதை ஏற்றுக் கொள்ள நான் ஒருபோதும் தயாரில்லை என்று நான் பலமுறை கூறி வந்திருக்கிறேன். ஏனெனில் மனிதனை அறுத்துப் பலியிடுவது உலகத்தில் ஆகுமான செயலாக இருந்தது என இஸ்லாமிய ஷரீஅத்திலிருந்து ஒருபோதும் நிரூபணமாகவில்லை. திருக்குர்ஆன் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் காலத்தில் பலியிடுதல் பற்றிக் குறிப்பிடுகிறது. அது மனிதனை அறுத்துப் பலியிடுவதல்ல. மாறாக பிறகு விலங்குகளை அறுத்துப் பலியிடுவது பற்றியதாகும்.

மனிதனை அறுத்துப் பலியிடுவதற்கு ஈடாகத்தான் ஆட்டை அறுத்துப் பலியிடுவது புழக்கத்திற்கு வந்தது என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு சொல்வது ஒரு மனித பலியின் அடையாளத்தை நிலைநிறுத்துவதற்காகத்தான் ஆடு முதலியவற்றை பலியிடும் கட்டளையிடப்பட்டுள்ளது என்ற பொருளில் வேண்டுமானால் சரியானதாக இருக்கலாம். அதற்காக ஆரம்பத்தில் மனிதனைப் பலியிடுவதற்கான கட்டளை இருந்தது. அந்த கட்டளை பிறகு மாற்றப்பட்டது என்று சொல்வது தவறாகும். ஏனெனில் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுடைய இரண்டு மகன்கள் செய்த பலியீடு பற்றி திருக்குர்ஆனில் வந்துள்ளது. ஆயினும் அவர்கள் மனித உயிர்களைப் பலியிடவில்லை. மாறாக பிற உயிரினங்களைப் பலியிட்டார்கள். அவர்களைப் பற்றி வருகின்ற அறிவிப்புகள் உண்மையாக இருந்தாலும் பொய்யாக இருந்தாலும் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் ஒரு மகன் ஆட்டை அறுத்துப் பலியிட்டார் என்றும், இன்னொருவர் மற்றதை அறுத்துப் பலியிட்டார் என்றும் தெரிகிறது.

ஆகவே, இந்த அறிவிப்புகள் முழுக்க முழுக்க உண்மையாக இருந்தால் அல்லது சில பகுதிகள் உண்மையாக இருந்தால், ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் தொட்டு இன்று வரை பிற உயிரினங்களைப் பலியிடுவதற்கான பழக்கம் இருந்து வந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. உண்மை இவ்வாறு இருக்கும் போது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் காலம் வரை மனித பலி நடைபெற்று வந்தது. பிறகுதான் ஆட்டை பலிகொடுக்கும் கட்டளை நியமிக்கப்பட்டது என்று கூறுவது சரியல்ல. காரணம், ஆரம்பத்திலிருந்தே இறை இயக்கங்களில் மனித பலி ஒருபோதும் கொடுக்கப்படவில்லை. மாறாக பிற விலங்குகளைத்தான் பலியிட்டு வந்திருக்கிறார்கள். குழந்தைகளைப் பலியிட வேண்டுமென்று ஒருபோதும் கட்டளை இடப்படவில்லை. அவ்வாறிருந்தும் அல்லாஹ் மனித பலியை நிறுத்துவதற்காக, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தம் மகனை பலி கொடுக்க வேண்டும் என கட்டளையிட்டான். பிறகு அந்தக் கட்டளையை மாற்றியமைத்தான் என்று கருதுவது சரியல்ல.

உண்மை என்னவென்றால், ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தம் குழந்தையைப் பலியிடுவதாக கனவில் கண்டார்கள் என்றால், அதன் பொருள், குழந்தையைத் தண்ணீரில்லாத காட்டில் அவர் விட்டு வர வேண்டும்; அந்தக் குழந்தை முழுமையான முறையில் மார்க்க சேவையில் ஈடுபட வேண்டும் என்பதாகும். அதாவது உலகத்தைப் பொருத்தவரை அந்தக் குழந்தை பலியிடப்பட்டு விட்டது. இது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு ரூஃயாவில் (ஆன்மீகக் காட்சியில்) காட்டப்பட்ட ஒரு முன்னறிவிப்பாகும். ஆயினும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இறையன்பின் காரணமாக இறைவனுக்காகத் தம் மகனைப் பலியிட விரும்பினார்கள். இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால், ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது சமுதாயத்தின் சம்பிரதாயத்திற்கேற்ப – அது இறைவனால் ஏற்படுத்தப்பட்டதாக இல்லாது மக்களால் உருவாக்கப்பட்ட ஒன்றாக இருந்தும் அவர்கள் தம் மகனை அறுத்துப் பலியிட விரும்பினார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் இந்தத் தியாக மனப்பான்மையையும் இறையன்பையும் கண்ட இறைவன் அன்னாரின் மீது மேலும் மகிழ்ச்சியடைந்து, இப்ராஹீமே! நீர் வெளிப்படையான முறையில் பலியிடுவதற்குத் தயாரானதைப் போன்றே நானும் அதனை வெளிப்படையான முறையில் காப்பாற்றுவேன் என்று கூறினான். அவ்வாறே நடந்தது. அந்த வறண்ட பாலைவனத்தில் வாழ்கின்றவர்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்காத காரணத்தால் அழிவு வந்து விடக் கூடாது என்பதற்காக உணவுப் பொருள்களை ஏற்படுத்திக் கொடுத்தான்.

பிறகு இன்னொரு விஷயம் இதில் கவனத்தில் கொள்ளத்தக்கது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இந்த

மகத்தான வேலையை பிறரிடம் ஒப்படைக்காமல் அதாவது நான் என் மகனை என் கையாலேயே அறுத்துப் பலியிடுவதைப் பார்க்க முடியாது; எனவே வேறு யாராவது அறுக்கட்டும் என்று சொல்லாமல் தாமாகவே மகனை அறுத்துப் பலியிடத் தயாரானதைப் போன்றே இறைவனும் அவருடைய மகனைக் காப்பாற்றுவதற்காகவும் அவரை பிற மனிதருடைய தேவையே இல்லாத அளவுக்கு தானாகவே நீரூற்றை உருவாக்கினான். அதிலிருந்து அந்தக் குழந்தை நீர் அருந்தியது. இவ்விதமாக பிற மனிதருடைய உதவியையும் அரவணைப்பையும் பெறுவதிலிருந்து இறைவன் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைக் காப்பாற்றினான்.

சமுதாயத்தில் சில நபர்கள் மார்க்க சேவைக்காக தம் வாழ்க்கையை தியாகம் செய்ய வேண்டும் என்பதற்கு இந்த சம்பவம் ஒரு மகத்தான அடையாளமாகும். அதாவது சமுதாயத்திலுள்ள மற்றவர்கள் அழிவிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக சமுதாயத்திலுள்ள ஒரு சிலராவது வெளிப்படையான முறையில் தம்மை அழிவுக்கு ஆளாக்க வேண்டும். இதுதான் இந்த ரூஃயா – ஆன்மீகக் காட்சியில் இறைவன் காட்ட விரும்பும் அடையாளமாகும்.




எந்தவொரு இயக்க –மும் அல்லது எந்தவொரு சமுதாயமும் அவற்றிலுள்ள மக்கள் முழுமையான முறையில் தம்மைத் தியாகம் செய்யத் தயாராகாத வரை அந்தச் சமுதாயம் உயிருடன் இருக்க முடியாது. அதே போன்று இன்னும் சிலர் தம்மால் இயன்ற வகையில் தம் சமுதாயத்திற்காகத் தியாகம் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இறை வழியில் முழுக்க முழுக்க தியாகம் செய்தல் என்றால், தமது எல்லா நேரத்தையும் மார்க்க சேவைக்காக செலவிட வேண்டும். இறை வழியில் பகுதியளவில் தியாகம் செய்தல் என்றால், சில நேரங்களை மார்க்கத்திற்காக செலவு செய்ய வேண்டும். சில நேரங்களை உலகத்தை சம்பாதிப்பதற்காக செலவு செய்ய வேண்டும். இவ்விரு வகைப்பட்ட தியாகங்களும் திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகிறது. அதாவது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த தியாகம், ஹஸ்ரத் இஸ்ஹாக் (அலை) அவர்கள் செய்த தியாகம், ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் முழுமையான முறையில் இறை வழியில் தியாகம் செய்யப்பட்டார்கள். அவர்கள் மார்க்க சேவைக்காக முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் இஸ்ஹாக் (அலை) அவர்கள் தம் நாட்டிலேயே வாழ்ந்தார்கள். அதனால் வியாபாரங்களிலும் ஈடுபட்டு, சில பகுதியை மார்க்க சேவைக்காக செலவிடும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

பகுதியளவில் தியாகம் செய்வது குறித்துத் திருக்குர்ஆன் وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ என்று கூறுகிறது. அதாவது ஒவ்வொரு நம்பிக்கையாளரும் தமது செல்வத்திலிருந்து சிலவற்றை மார்க்கத்திற்காக செலவு செய்ய வேண்டும். இது ஹஸ்ரத் இஸ்ஹாக் (அலை) அவர்கள் செய்த தியாகமாகும். மேலும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் தியாகம் என்பது தம்மை முழுக்க முழுக்க மார்க்க சேவையில் ஈடுபடுத்திக் கொள்வதும் அதற்காக தம்மை அர்ப்பணித்துக் கொள்வதுமாகும். இந்த இரண்டு வகையான தியாகங்கள் செய்பவர்களும் ஒரு சமுதாயத்தில் இல்லாத வரை அந்த சமுதாயம் வெற்றி பெற முடியாது.

சமுதாயத்தில் உள்ளவர்கள் அனைவரும் உலக வேலைகளை விட்டு விட்டு தம்மை மார்க்க சேவையில் ஈடுபடுத்திக் கொண்டால் மார்க்கத்திற்குத் தேவையான பண வசதியை எவ்வாறு நிறைவேற்றுவது என்ற கேள்வி எழும் என்பதில் சந்தேகமில்லை. இதிலிருந்து தெரிவது என்ன வென்றால், மக்கள் அனைவரும் தமது எல்லா வேலைகளையும் விட்டு விட்டு மார்க்க சேவையில் ஈடுபட வேண்டும் என்பது இறைவன் நாட்டம் அல்ல. மார்க்க சேவைக்கென்று செல்வமும் தேவைப்படுகிறது. பணம் இல்லை என்றால் வேலை நடக்காது. ஆனால் சமுதாயத்திலுள்ள எல்லா மக்களுமே மார்க்க பிரச்சாரகராக மாறி விட்டால் – அவர்கள் தம் முழு நேரத்தையும் மார்க்கத்தைப் பரப்புவதிலேயே செலவிட்டு விட்டால் பிரசுரங்கள், புத்தகங்கள் எவ்வாறு வெளி –யிடுவது? அவற்றிற்கு ஆகும் செலவுகளை எவ்வாறு சமாளிப்பது?

உண்மை என்னவென்றால், மார்க்கத்தின் சில தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பணம் அவசியமாகிறது; கம்பீரம் தேவைப்படுகிறது; கொள்கைப் பிடிப்புள்ள குழு தேவைப்படுகிறது. இவையனைத்தும் உலக வேலைகளினால் கிடைக்கக் கூடியவையாக உள்ளன. எனவே, ஜமாஅத்தின் மாபெரும் பகுதியினர் உலகச் செல்வங்களைச் சம்பாதித்து அவற்றிலிருந்து மார்க்கத் தொண்டுகளுக்காக செலவு செய்ய வேண்டும். கொள்கைப் பரப்புநராக வேலை செய்வதற்கென்று தம்மை அர்ப்பணித்தவர்கள் இரவு பகலாக மார்க்க வேலைகளிலும், சமுதாயப் பணிகளிலும் ஈடுபட்டிருக்க வேண்டும். எதிரிகளின் நிலைமை பற்றி ஜமாஅத்திற்குத் தெரியப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அவர்களுடன் எதிர்த்துப் போட்டியிடுவதில் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

இந்த இரு வகையான மக்களும் சேர்ந்து தொண்டாற்றும் போதுதான் வெற்றி கிடைக்கும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இந்த முறைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அதனை நினைவு கூர்வதற்காகவே இந்தப் பெருநாள் கொண்டாடப்படுகிறது.

தியாகம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? பிற உயிரை அழிப்பதால் என்ன பலன் என்று மக்களுள் பலர் கேட்கின்றனர்.




ஆனால் உண்மையில் தியாகம் செய்வதற்கும் பயிற்சி தேவைப்படுகிறது. எந்தவொரு வேலையையும் பயிற்சியின்றி செய்து விட முடியாது. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. சிறு வயதில் தச்சர் எங்கள் வீட்டில் வேலை செய்து வந்தார். நாங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு வந்ததும் நாங்கள் தச்சருடைய கருவிகளை வேடிக்கைப் பார்ப்போம். அந்த தச்சரோ தன் கருவிகளைத் தொடவிட மாட்டார். ஒருநாள் ஒரு தச்சர் தன் கருவிகளை எங்கள் வீட்டிலேயே விட்டுச் சென்று விட்டார். எனவே எனக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. நானும் எனது நண்பர்களும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் தச்சரின் கருவிகளைக் கொண்டு விளையாடினோம். நான் உளியை எடுத்து ஓர் அடி அடித்துப் பார்த்தேன். அவ்வளவுதான்; அது என் விரலில் பட்டு விட்டது. அந்த அடையாளம் இன்றும் என் விரலில் இருக்கிறது. இந்த சம்பவத்தின் மூலம் நான் சொல்ல வருவது என்னவென்றால், எந்த வேலையையும் பயிற்சி இல்லாமல் செய்து விட முடியாது. ஆனால் வெளிப்படையாக தச்சர் வேலை செய்வதைப் பார்க்கும் போது இதை விட நம்மால் செய்ய முடியும் என்று கருதுகிறோம். செய்யும் போதுதான் கஷ்டம் புரிகிறது.

இதே போன்று மனிதன் இறைவனுடைய வழியில் உயிரையும் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டியது மிக அவசியம். மேலும் வெளிப்படையான பலி இல்லாமல் இந்த வேலை நடைபெற முடியாது. இரத்தம் சிந்தக்கூடிய பயிற்சி மனிதனுக்கு இல்லையென்றால் தன் உயிரைக் கொடுக்கத் தயாராகும் மனநிலைஅவனுக்கு உருவாக முடியாது. பழங்களையும் காய்கனிகளையும் மட்டுமே சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்கள் ஒரு வீரனோடு சண்டையிட்டு இரத்தம் சிந்த ஒருபோதும் தயாராக மாட்டார்கள். (அந்த அளவுக்கு அவர்களுக்கு தைரியம் இருப்பதில்லை.) ஏன் பசு வதையை எதிர்த்துப் போராடும்போது இந்துக்கள் அவர்கள் காய்கனிகளை மட்டுமே சாப்பிட்டுக் கொண்டிருந்தபோதிலும் முஸ்லிம்களைக் கொன்று விடுகிறார்களே! இது அவர்களிடம் உள்ள தைரியத்தை வெளிப்படுத்தவில்லையா என்று சிலர் கேட்கலாம். ஆனால் இது அவர்கள் செய்யும் தியாகமல்ல. (எனவே இதனை வைத்து அவர்களிடம் தைரியம் உள்ளது என்று சொல்வதற்கில்லை.) மாறாக அவ்வாறு செய்வது அவர்களிடமுள்ள கோழைத் –தனத்தைக் காட்டுகிறது. மற்றபடி எவர்களிடம் ஆற்றலும் வல்லமையும் உள்ளதோ அவர்கள் பிறரை அழித்து விடுவதில் தைரியம் காட்ட மாட்டார்கள். மாறாக அவர்கள் (எதிரிகளுக்கு) வாய்ப்பு கொடுக்கின்றார்கள். நான் பலமுறை பூனைக்கும் எலிக்கும் உள்ள கதையைக் கூறியிருக்கிறேன். அதாவது பூனை எலியைப் பிடித்து விட்டு பிறகு விட்டுவிடுகிறது. எலி ஓட விரும்பும்போது மீண்டும் பூனை அதனைப் பிடித்துக் கொள்கிறது. இந்த செயல் மூலம் எலி தன்னுடைய பிடியிலிருந்து வெருண்டோடி விட முடியாது என்பதை பூனை எலிக்கு அறிவுறுத்த விரும்புகிறது.

எனவே, பிறரை முற்றிலும் அழித்தொழிப்பதற்காக முயற்சிப்பது கோழைத்தனத்தின் அடையாளமாகும். வீரமுள்ள மனிதன் தன் விரோதி, முற்றிலும் அழிந்துவிடாதிருக்கும் அளவிற்கே நஷ்டமிழைப்பான். உலகில் எந்த அளவுக்குப் பெரும் பெரும் வீரர்கள் தோன்றியுள்ளார்களோ அவர்கள் அந்த அளவுக்கு மன்னிக்கும் குணத்தையும் கொண்டுள்ளார்கள். இதற்கு நேர்மாறாக எத்தனையோ கோழைகளும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பிறரை அழிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் தம் விரோதிகளை அழித்துக் கொண்டே சென்றனர். பகைவர்களை வெற்றி கொண்ட பிறகு தண்டனை என்ற முறையில் அவர்களுக்குத் தேவையான அளவிற்கு மட்டும் துன்பம் கொடுத்து, பிறகு மன்னித்து விடுவதுதான் உண்மையான வீரமாகும்.

சுருக்கமாக, பயிற்சியின்றி மனிதன் தியாகம் செய்யத் தயாராக முடியாது. இந்தப் பயிற்சிதான் இந்தப் பெருநாளின் போது பயிற்றுவிக்கப்படுகிறது. அதாவது இறைவனுக்காக இரத்தம் சிந்த தேவைப்படும்போது இரத்தம் சிந்தவும், இரத்தம் சிந்துவதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் என்ற கட்டளை வரும்போது தவிர்ந்து கொள்ளவும் கூடிய மனப் பக்குவம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே மனிதன் இந்தப் பெருநாளில் தன் கைகளால் உயிரினங்களைப் பலியிடுகிறான்.


இதன்படி இந்த (ஹஜ் மாதத்தின்) நாட்களில் இரத்தமும் சிந்தப்படுகிறது; இரத்தம் சிந்தப்படுவது தடுக்கப்பட்டும் உள்ளது. முஸ்லிம்கள் (ஹஜ்ஜுப் பொருநாளாகிய) இன்று இரத்தம் சிந்துகிறார்கள். அதாவது குர்பானி கொடுக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பத்து பன்னிரண்டு நாள்களுக்கு முன் வரை மக்காவில் வேட்டையாடுவது தடுக்கப்பட்டுள்ளது.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

# ஒரு முன்மாதிரி கணவர்

**தமிழாக்கம்: J.S. சலீம் அஹ்மது**



இறை வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கிலா.ஃபத் அமைப்பு நூறு ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. நாம் இப்போது கிலா.ஃபத்தின் ஐந்தாவது சகாப்தத்தில் இருந்து வருகிறோம். இப்போது எல்லாம் வல்ல இறைவன் தனது நியதிக்கேற்ப எனது துணைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் (ஐந்தாவது கலீ.ஃபத்துல் மஸீஹ், அல்லாஹ் அவர்களுக்கு உதவி புரிவானாக..!) அவர்களை கிலா.ஃபத் அமைப்பின் ஐந்தாவது வல்லமையாக இந்த பதவியில் நியமித்துள்ளான்.

பாகிஸ்தான் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் (இளைஞர்களுக்கான கிளை அமைப்பு) தேசியத் தலைவர், கிலா.ஃபத் அமைப்பின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தஷ்ஹிஸுல் அல்ஹான் (Tashhizul Azhaan) பருவ இதழ், ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள் பற்றிய ஒரு சிறப்பு பதிப்பு ஒன்றை வெளியிட விரும்புகிறது எனக் குறிப்பிட்டு எனக்கு எழுதியிருந்தார். இதற்காக, நான் 'ஹுஸூர் - ஒரு முன்மாதிரி கணவர்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்ற அவரது ஆவலையும் தெரிவித்திருந்தார். எனவே, நான் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சிறப்பியல்புகள் சிலவற்றை இதில் கூறுவதோடு, அன்னார் கிலா.ஃபத் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முன்னுள்ள எனது சில நினைவுகளையும் எடுத்துக் கூறுவேன். இதன் அடிப்படையில், எனது மனதில் நிற்கும் விஷயங்களுள் சிலவற்றை எழுதுகிறேன்.

## வீட்டு வேலைகளில் நல்கிய பூரண ஒத்துழைப்பு

தமது வாழ்க்கையில் கலீ.ஃபா என்ற நிலையை அடைவதற்கு முன்பே, ஹுஸூர் (அய்) அவர்கள் தம்மை மார்க்கத் தொண்டாற்றுவதற்காக அர்பணித்து இருந்தார்கள். இச்சேவையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, இரவும் பகலும் தமது நேரத்தை அதிலேயே செலவிடுவார்கள். அலுவலகப் பணிகள் இருந்த போதிலும், வீட்டுவேலைகளிலும் அதிக ஆர்வம் செலுத்தியவாறு, தமது முழு ஒத்துழைப்பையும் நல்குவார்கள்.

1977 -ஆம் ஆண்டு நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் அன்னார் கானா நாட்டில் அஹ்மதிய்யா மேல்நிலைப் பள்ளியின் முதல்வராக நியமிக்கப்பட்டார்கள். கானாவில் அவர்கள் பணிக்காக நியமிக்கப்பட்டு நாங்கள் அங்கு சென்ற போது, அந்நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருந்தது. மழை பொய்த்ததன் காரணமாக, பயங்கர வறட்சி நிலவியது. நாட்டின் நிலைமை அதீத கவலைக்கு ஆட்பட்டிருந்தது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் உள்ள அனைத்து நல்ல பண்புகளிலும், மிகச் சிறந்த பண்பென்று நான் பெரிதும் மதித்துப் போற்றுவது, அவர்களிடம் சுயநலத்தின் சாயலைக் கூட ஒருபோதும் காண முடியாது. அதிகமான வேலைப்பளுவும், நிரம்ப பொறுப்புகளும் இருந்த போதிலும், அவர்கள் என்னையும், குழந்தைகளையும் தம்மால் இயன்ற அளவுக்குச் சிறந்த முறையில் கவனித்துக் கொள்வார்கள். உண்மை என்னவெனில், வக்.ஃபே ஸிந்தகிகள் (வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள்), அவர்களது குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு, அவர்களின் துணைவியர்களும் தியாகம் செய்யவும், முழுவதும் பக்கபலமாக இருக்கவும் வேண்டும். குறிப்பாக, வக்.ஃபே ஸிந்தகிகளுக்கு ஜமாஅத் வழங்கும் அந்த அருளுக்குரிய உதவித் தொகைக்குள் குடும்பத்தை நடத்தும் விஷயத்தில், கணவரின் ஒத்துழைப்பின்றி ஒரு வரையறுக்கப்பட்ட ஊதியத்திற்குள் குடும்பத்தை நிர்வகிப்பது என்பது மனைவிக்கு ஒரு நிரந்தர போராட்டமாகவே இருக்கும்.

நான் சில குடும்பங்களில் பார்த்துள்ளேன். கணவனின் விருப்பத்தின்படி உணவும், உடனுக்குடன் சப்பாத்தியும் தயாரிக்கப்படும்; கணவனுக்காக பிரத்யேக உணவுகள் ஏற்பாடு செய்யப்படும்; அதேவேளை மனைவியும் குழந்தைகளும் அப்போது மீதம் மிஞ்சியதை உண்ணுவர். ஆனால், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஒருபோதும் இத்தகைய ஒரு விருப்பத்தை வெளிப்படுத்தியதோ, இதுபோன்று கேட்டு வற்புறுத்தியதோ கிடையாது. இவ்வாறு, ஒருபுறம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் மீது பாராட்டும், உயர்மதிப்பும் என் மனதில் அதிகரித்துக் கொண்டிருந்தது. மறுபுறம், வாழ்க்கையை அர்ப்பணித்த சிலர், குடும்ப விஷயம் என்று வரும்போது எவ்வித தியாகமும் செய்யாதிருப்பதை எண்ணி நான் வியப்படைந்துள்ளேன். மாறாக, அவர்கள் அவர்களது மனைவிகளிடமும் குழந்தைகளிடமும் தியாகத்தைக் கண்டிப்புடன் எதிர்பார்த்தனர்.

வடக்கு கானாவின் டமாலியில் அமைந்துள்ள, அஹ்மதிய்யா விவசாயப் பண்ணையின் மேலாளராக ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இருந்தார்கள். அப்போது அவர்கள் அந்த நாட்டின் வரலாற்றிலேயே முதன் முதலாக, கோதுமையை பயிரிட்டு வளரச் செய்து வெற்றி கண்டார்கள். விவசாய மேம்பாட்டிற்காக டமாலியில் நாங்கள் இரண்டு ஆண்டுகள் வசித்து வந்தோம். கானாவின் வடபகுதிகளுக்கு டமாலி தலைமையிடமாக இருந்து வந்தது. ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அவ்வப்போது, பயிரிடும் போதும், அறுவடை செய்யும் சமயங்களிலும் இரண்டு மூன்று இரவுகள் உள்ளூர் கிராம மக்கள் பகுதியின் குடிசைகளில் தங்குவார்கள். அத்தகைய நாட்களில், அவர்கள் அனைத்து விதமான கஷ்டங்களையும் மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொள்வார்கள். மேலும், அவர்கள் வீட்டு வேலைகளிலும் எனக்கு எல்லா விதத்திலும் உதவி புரிவார்கள். வெளி இடங்களில் இருந்து தண்ணீர் சுமந்து கொண்டு வருவார்கள்.

கானாவில் எப்பொழுதும் தண்ணீர் பற்றாக்குறை இருந்து வந்தது. நாங்கள் வீட்டிற்கு வெளியே தண்ணீர் தொட்டி வைத்திருந்தோம். தண்ணீர் லாரி வரும்பொழுது அது நிரப்பப்படும். எங்களுடைய சமையலறை மற்றும் குளியலறையில் பெரிய பிளாஸ்டிக் டிரம்கள் இருந்தன. ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தினசரி சுபுஹ் தொழுகைக்குப் பின்னர், வாளி மூலம் தண்ணீர் சுமந்து வந்து இந்த டிரம்களை நிரப்புவார்கள். அவர்களுக்கு எவ்வளவு அவசர பணிகள் இருப்பினும், நேரமின்மையைக் காரணம் காட்டி அந்த டிரம்களை நானே நிரப்பிக் கொள்ளுமாறு என்னிடம் அவர்கள் ஒருபோதும் கூறியதில்லை. எனக்கு உடல்நலமின்மை ஏற்படும் போதெல்லாம், எங்களுக்கு சமையல் செய்யும் பொறுப்பை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். எங்களது குழந்தைகளுக்குத் திருக்குர்ஆனை கற்றுக் கொடுப்பதில், அவர்கள் எனக்குப் பெரிதும் உதவுவார்கள்.

### வல்லமைமிக்க இறைவன் மீது முழுமையான நம்பிக்கை

நாங்கள் டமாலியில் (கானாவின் வடபகுதி) குடியேறிய சிறிது காலத்திற்குள் மருத்துவமனைகளில் மருத்துவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நடந்தது. மருத்துவர்கள் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை மட்டுமே மருத்துவமனைகளுக்கு பணி செய்ய வருவர். இந்த நேரம் தவிர, மற்ற நேரங்களிலும், வார விடுமுறை நாட்களிலும் எந்த மருத்துவ ஊழியர்களும் மருத்துவமனைகளில் இருக்க மாட்டார்கள். பிறந்து இரண்டு நாட்கள் மட்டுமே கழிந்திருந்த நிலையில், எங்களது மகன் வகாஸ் (அல்லாஹ் அவருக்கு பாதுகாப்பு வழங்குவானாக!) அப்போது வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டார். எங்களது புதிய சூழல், பற்றாக்குறையான மருத்துவ வசதிகள் மற்றும் மருத்துவர்களின் வேலை நிறுத்தம் ஆகிய காரணங்களினால், உண்மையிலேயே அது ஒரு மிகுந்த கவலைக்குரிய சூழ்நிலையாக இருந்தது. அவ்வளவு சிறியதோர் பச்சிளங்குழந்தை படும் வேதனையை பார்த்துக் கொண்டு, எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எங்களது மகள் ஃபராவும் (அல்லாஹ் அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பானாக!) அப்போது மிகவும் இளவயதுடைய சிறுமியாக இருந்தாள். நான்





பாக்கிஸ்தானிலிருந்து சில மருந்துகள் கொண்டு வந்திருந்தேன். அவற்றின் வீரியம் மிகவும் அதிகமாகும். மருத்துவர்கள் இந்த அளவு சிறிய குழந்தைக்கு இத்தகைய வீரியமிக்க மருந்துகளை, ஒருபோதும் பரிந்துரை செய்யமாட்டார்கள். ஆயினும், அந்த சூழலில் நாங்கள் பெரிதும் கவலைக்குள்ளாகி இருந்தோம். அப்போது அவர் (வகாஸ்) வயிற்றுப்போக்கின் காரணமாக மிகவும் பலவீனமாக இருந்தார். பால் அருந்தக் கூட இயலவில்லை. எல்லாம் வல்ல இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து, அவனிடம் துஆ செய்து, ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தனது வலக்கரத்தின் ஒரு விரலை அந்த மருந்தினுள் மூழ்கவிட்டு எடுத்ததன் பின், வகாஸ் அவர்களுக்கு இருமுறை கொடுத்து விட்டு, அல்லாஹ்வின் நாட்டம் என்னவென்பது யாருக்கும் தெரியாது எனக் கூறினார்கள். இதுவரை பரிசோதித்திராத நிவாரணியாக அது இருந்தபோதிலும், எங்களது கவலை அதற்குப் பிறகு நீடிக்கவில்லை. சில நிமிடங்களில், வகாஸ் அவர்களின் உடல்நிலை படிப்படியாக முன்னேற்றமடைந்தது. வல்லமை மிக்க இறைவன் அற்புதமான முறையில் அவர்களை குணப்படுத்தினான். அல்ஹம்துலில்லாஹ் (புகழனைத்தும் இறைவனுக்கே!).

குழந்தைகள் நோயுற்ற வேளைகளில், ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எனக்கு அனைத்து விதத்திலும் உதவி செய்வார்கள். கூட்டங்கள் நடக்கும் பொழுது, எங்களது வீட்டில் ஜமாஅத் சகோதரர்கள் ஒன்று கூடுவர். அப்போது, நான் ஆண்கள் அமர்ந்திருக்கும் சபையைக் கடந்து சமயலறைக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்ததால், ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தாமே குழந்தைகளின் பால் பாட்டிலை கழுவித் தருவார்கள்.

### ஹுஸுர் (அய்) அவர்கள் மீது ஹஸ்ரத் நான்காவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கொண்டிருந்த அன்பு

ஹஸ்ரத் நான்காவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், ஹுஸுர் (அய்) அவர்களின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். அன்னார் ஹுஸுர் (அய்) அவர்களுடன் அன்புடனும் நேசத்துடனும் பரிமாரிக் கொள்வார்கள். நாங்கள் கானாவில் இருந்த போது, ஹுஸுர் (அய்) அவர்களின்

பெற்றோர்கள் (ஹஸ்ரத் மிர்ஸா மன்சூர் அஹ்மத் சாஹிப் மற்றும் ஹஸ்ரத் சய்யிதா அபா நாஸிரா பேகம் சாஹிபா) USA-ல் வசித்து வந்த அவர்களது இளைய மகன் மிர்ஸா மக்ஃபூர் அஹ்மத் சாஹிப் (ஹுஸூர் அவர்களின் இளைய சகோதரர்) அவர்களை சந்திக்கச் சென்றார்கள். அவர்கள் அமெரிக்காவிற்குப் பயணம் மேற்கொண்டிருந்த நாட்களில், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களிடமிருந்து ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், அவர்கள் தனது சொந்த கரத்தினால் தனிப்பட்ட குறிப்பொன்றை இவ்வாறு எழுதியிருந்தார்கள். "எனது அன்பிற்குரிய சகோதரரும் சகோதரியும் (அதாவது ஹுஸூர் அவர்களின் பெற்றோர்கள்) தற்போது அமெரிக்கப் பயணத்தில் இருக்கின்றார்கள். மார்க்கத்திற்காக கடினமாக தொண்டாற்றும், வாழ்க்கையை அர்ப்பணித்த எனது மகனைப் பற்றிய எந்த செய்தியேனும் அவர்கள் பெற்றிருப்பார்களா? இல்லையா என்பதையும், தங்களை (ஹுஸூர்) பற்றிய நினைப்பாவது அவர்களின் மனதைக் கடந்து சென்றிருக்குமா என்பதையும் எண்ணி நான் வியப்பில் ஆழ்கிறேன். அவர் தனது மார்க்கத்திற்காக ஆப்ரிக்க காட்டில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். எப்படியிருப்பினும், எனது இந்த வீரமிக்க மகன் எனக்கு மிகவும் பிரியமானவராக இருக்கின்றார்." ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மீது கொண்டிருந்த எல்லையில்லா அன்பையும் நேசத்தையும் இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.



## தவ்ஹீது (ஏக இறைக் கொள்கை) குறித்த மிகச்சிறந்த படிப்பினை

எங்களது குழந்தைகள் கானாவில் பள்ளியில் சேர்க்கப்பட்டபோது, அது கிறித்தவக் கொள்கைகள் போதிக்கப்பட்டு வந்த ஒரு புரொடஸ்டன்ட் பள்ளிக்கூடமாக இருந்தது. எனவே இயேசு, கடவுளின் குமாரர் என்ற நிலையில் எப்பொழுது ஆராதனைகள் பாடப்பட்டாலும் அல்லது ஷிர்க்கின் (இறைவனுக்கு இணை வைத்தல்) எந்த ஓர் அம்சம் அதில் தென்பட்டாலும் அதை அவர்கள் பாடக் கூடாது என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எங்களது குழந்தைகளுக்கு அறிவுரை கூறியிருந்தார்கள். பள்ளியின் அவைக் கூட்டத்தில் இத்தகைய ஆராதனைகள் பாடப்பட்டன.

பள்ளியின் முதல் நாளன்று, குழந்தைகள் இந்த ஆராதனைகளைப் பாடாததன் காரணமாக, இதற்குத் தண்டனையாக பிரம்பால் அடிக்கப்பட்டு அவர்கள் வீடு திரும்பினர். ஹுஸூர் அவர்கள், "என்ன நடந்தாலும் பரவாயில்லை; அவர்கள் அத்தகைய ஆராதனைகளைப் பாடக்கூடாது" என்று குழந்தைகளுக்கு விளக்கிக் கூறி நம்பிக்கை ஊட்டினார்கள். தொடர்ந்து மூன்று நாட்களாக குழந்தைகள் இதற்காக தண்டிக்கப்பட்டு சோதனைக்குள்ளாயினர். நான்காவது நாள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தாமே பள்ளிக்கு நேரில் சென்று தலைமை ஆசிரியரிடம் இவ்வாறு கூறினார்கள்: "நாங்கள் முஸ்லிம்களாக இருக்கிறோம். ஓரிறைவனை மட்டும் வணங்குபவர்களாக இருக்கின்றோம். நாங்கள் இயேசுவை இறைவனது தூதர் என்று நம்புகிறோம். ஆனால், கடவுளின் குமாரராக அல்ல. இந்தக் காரணத்தினால் எனது குழந்தைகள் பள்ளியில் இத்தகைய ஆராதனைகளைப் பாடமாட்டார்கள்." இதைக் கேட்ட தலைமை ஆசிரியர், "எங்களது பாடத் திட்டத்தில் பைபிள் கற்பது ஒரு கட்டாயப் பாடமாக உள்ளது. (உங்களது குழந்தைகள் இதை படிக்காவிட்டால்), அவர்கள் தேர்ச்சி பெற மாட்டார்கள்" என்று கூறினார். இதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், "இந்தப் பாடப்பகுதிகள் சம்பந்தமாக எனது குழந்தைகள் எழுதும் போதெல்லாம், 'கிறித்தவக் கண்ணோட்டம் இன்னின்னவாக உள்ளது' என்று எழுதுவார்கள்" என்று பதிலளித்தார்கள். இதை ஏற்றுக் கொண்ட தலைமை ஆசிரியர், குழந்தைகள் இனி ஆராதனைகள் பாடாமல் இருக்க அனுமதி வழங்கினார்கள். இவ்வாறு மிகுந்த ஞானத்துடன் பரஸ்பர ரீதியில் புரிதலை ஏற்படுத்தி இந்தப் பிரச்சனையை சுமூகமாகத் தீர்த்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது குழந்தைகளுக்கு தவ்ஹீது குறித்து கற்பித்த முதல் பாடமாக இது இருந்தது.

## ஷரீஅத்தைப் பற்றோடு பின்பற்றுதல்

கானாவில் எங்களது அண்டை வீட்டாரில் ஒருவர் இராணுவ தளபதியாக இருந்தார். ஒருநாள் அவர் ஒரு மதுபான பாட்டிலை எங்களது ஃபிரிட்ஜில் வைப்பதற்காக கொடுத்து அனுப்பினார். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அவ்வாறு செய்வதற்கு மறுத்து விட்டார்கள். இதனால், அவர் கோபம் அடைந்தவாறு எங்களது வீட்டிற்கு வந்து அதிவேகத்துடன் கதவைத் தட்டினார். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கதவைத் திறந்து, அவரை வீட்டினுள் வரவழைத்து அமரச் செய்தார்கள். அவர் ஏன் கோபமாக இருந்தார் என விசாரித்தார்கள். அந்தத் தளபதி, 'பயன்படுத்தாத ஒரு புதிய மது பாட்டிலை உங்களது பிரிட்ஜினுள் வைப்பதால் என்ன தீங்கு நேர்ந்து விடப்போகிறது' எனக் கேட்டார். அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், "மது அருந்துபவரும், பிறருக்கு மது அளிப்பவரும், மதுவை

தயாரிப்பவரும், மதுவை பாதுகாத்து அல்லது சேகரித்து வைப்பவரும், மதுவை விற்பவரும் நரகத்திற்கு உரியர்கள் என்று எங்களது தூய தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே, இப்போது நீங்களே முடிவு செய்யுங்கள். நான் நரக நெருப்பிற்குரியவர்களுடன் இருக்க வேண்டுமா? நிச்சயமாக இல்லை." இதைக் கேட்டு அந்த தளபதியின் கோபம் தணிந்தது. வருத்தம் தெரிவித்து விடைபெற்றார்.

எல்லாவற்றையும் அமைதியாக கவனித்து, அதன் பின்னர் தீர்க்கமான முடிவெடுப்பது ஹுஸூர் (அய்யத-ஹுல்லாஹ்) அவர்களின் வழக்கமாக இருந்தது. ஒர் ஆசிரியர் ஒருமுறை இதைப் பற்றி கூறினார்: "தாங்கள் எப்போதும் அமைதியாகவே இருப்பதாகத் தோன்றுகிறது. ஆயினும், அனைத்தையும் அதிக அளவில் உன்னிப்பாக கவனிப்பவராக இருக்கின்றீர்கள்." அவர்களது செயல்பாடுகளை மிகவும் வெளிப்படையாகக் காண முடியாது; எனினும் அவர்கள் அவர்களது உறவினர்கள் மீது அமைதியான முறையில் குறிப்பான கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள். அவ்வாறு செய்வதை இன்னமும் தொடர்கிறார்கள்.

நான் ஏதேனும் சில பிரச்சனைகளினால் கவலைக்கு உள்ளானால், பொறுமையையும் துஆவையும் கைக் கொள்ளுமாறு என்னிடம் கூறுவார்கள். அதன் மூலம், அல்லாஹ்வின் புறமிருந்து கிடைக்கும் மாபெரும் அருட்களுக்கு நானே சாட்சியாக இருக்கிறேன். நான் கஷ்டங்களை சந்திக்கும் போதெல்லாம், அவர்கள் எனது மன உறுதியை ஊக்கப்படுத்துவார்கள். "உன் மீதுதான் தவறு" என்று அவர்கள் ஒருபோதும் கூறியதில்லை; மற்றவர்களோடும் அவர்கள் மன இறுக்கத்தை வெளிபடுத்தியதில்லை. யாராவது அவர்களுக்குத் துன்பமிழைத்தால், இந்த ஈற்றடி கவிதை வரிகளைப் படிப்பார்கள்.

உங்களோடு என்னை நானும் இணைத்துக் கொள்வதா!
நானும் பாக்கியமற்றவராய் மாறிவிடவா!

## கிலா∴பத்திற்குக் கட்டுப்படுதல்

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இயல்பு, காலத்தின் கலீ∴பாக்களுக்குக் கட்டுப்படுதலோடு ஒன்றி இருந்தது. கலீ∴பாவின் தரப்பிலிருந்து கிடைக்கப் பெறும் சிறு அறிகுறியைக் கூட, கட்டுப்படுவதற்கான கட்டளையாகவே கருதுவார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மீது, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கொண்டிருந்த நேசமும் நெருக்கமும் முழுமையான மதிப்புடன் பிணைந்து இருந்தது. அதேபோன்று, ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களும் ஹுஸூர் (அய்) அவர்களின் மீது பிரத்யேக அன்பும் நேசமும் கொண்டிருந்ததோடு, அவர்கள் மீது அதிக அக்கறை செலுத்தி வந்தார்கள். சிறு வயதிலிருந்தே எந்த ஒரு சூழ்நிலையிலும் தமது விருப்பத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொள்வது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இயல்பில் இல்லையெனினும், உணவு வகையில், அவர்களுக்கு புரோட்டா நன்கு பிடிக்கும் என்பதை ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அறிந்திருந்தார்கள். கானாவின் தேசிய மற்றும் பொருளாதார சூழ்நிலையை செய்தியின் வாயிலாக அனைவரும் அறிந்திருந்தனர். இதன் பின்னணியில், ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு மிகவும் பிரியமாக ஒரு கடிதம் எழுதினார்கள். அதில், "மஸ்ரூர் அவர்கள் புரோட்டா சமைப்பதற்கு அங்கு ஆயில் கிடைக்கிறதா இல்லையா என்பதை இறைவன் மட்டும்தான் அறிவான்" எனக் குறிப்பிட்டார்கள். இதற்குப் பதில் எழுதும் போது, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், "நாங்கள் சாப்பிடுவதற்கு அன்னாசிப்பழம், வாழைப்பழம் போன்றவை இருக்கின்றன" என எழுதினார்கள். அதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், "தாங்கள் நற்பாக்கியம் பெற்றவர் ஆவீர்கள். அன்னாசிப்பழத்தின் விலை இங்கு மிக அதிகம்" என நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்கள்.

"கானாவில் உங்களுக்கு என்ன கிடைக்கிறது" என ஹஸ்ரத் சய்யிதா அபா சாஹிபா அவர்கள் கேட்டபோது, "எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணை" என ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உணர்வுப்பூர்வமாக பதிலுரைத்தார்கள். எனது மகள் ∴பரா சாஹிபா (அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக!) அவர்களுக்குப் பித்தப்பை அறுவை சிகிச்சை செய்யப்பட்ட போது, நாங்கள் அவர்களது குழந்தைகள் இருவரையும் கவனித்துக் கொண்டோம். அப்போது மன்சூர் (ஹுஸூர் அவர்களின் பேரர்) அவர்களுக்கு விளையாட்டுக் காட்டுவதற்காக, ஹுஸூர் (அய்) அவர்கள் பல மணி நேரங்கள் அவருடன் நடந்தே தமது நேரத்தை இதற்காகச் செலவிட்டார்கள்.

## காதியான் பயணம்

1991 -ஆம் ஆண்டு நாங்கள் காதியான் செல்ல ஏற்பாடுகள் செய்தோம். எனது தாயார், எனது தகப்பனார், எனது மாமி அமத்துல் நஸீர (Khala Cheeru) மற்றும் எனது பாட்டி ∴பர்கன்தா ஷா சாஹிபா ஆகியோர் எங்களோடு இணைந்து வந்தனர். எனது சகோதரர் காசிம் சாஹிபும் எங்களுடன் வந்தார். Khala Cheeru அவர்களையும் எனது பாட்டியையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை அவர் பார்த்துக் கொண்டார். மற்ற அனைவரையும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கவனித்துக் கொண்டதுடன், பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் முழுப் பொறுப்பேற்று செய்தார்கள்; அனைத்து சுமைகளையும் கட்டுவது, படுக்கைகளைச் சுருட்டிக் கட்டி தயார் செய்தது, மேலும் தேவையான மற்றனைத்து ஏற்பாடுகளையும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களே செய்தார்கள். எங்களது பயணத்தின் போதும், அங்கு தங்கிய நாட்களிலும் என்னுடன் இணைந்து மூத்தவர்களை கவனப்பதில் பெரும் பங்கு ஆற்றினார்கள்.

## ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மீது இருந்த உயர்மதிப்பும் கண்ணியமும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் மீது ஒப்பற்ற மதிப்பு வைத்திருந்தார்கள். தமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து மரியாதை செலுத்துவார்கள். ஒருமுறை, நான்காவது கலீ∴பா (ரஹ்) அவர்களுடன் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த போது, அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக பேசிக்கொண்டிருக்கும் போதே குனிந்தவாறு சிரம் தாழ்த்திய நிலைக்குச் சென்றார்கள். அப்போது ஒரு மனிதர் ஹுஸூர் (அய்) அவர்களிடம் யாரிடம் தொலைபேசியில்

பேசிக் கொண்டிருந்தீர்கள் என்று கேட்ட போது, அது ஹஸ்ரத் நான்காவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரஹ்) என அவர்கள் பதிலளித்தார்கள்.

### ஹஸ்ரத் நான்காவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுதல்

அனைத்து விஷயங்களிலும், ஹுஸூர் (அய்யத -ஹுல்லாஹ்) அவர்கள் கலீஃ.பா (ரஹ்) அவர்களின் அனைத்து அறிவுரைகளின்படி செயலாற்றியதுடன், அவற்றை முழுமையாக நிறைவேற்றவும் செய்தார்கள். அதன் படி செயலாற்றுவதில், ஒரு சிறு மாறுதல் நிகழ்வதைக் கூட அனுமதிக்க மாட்டார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் நோயுற்றிருந்த போது, தம்மைச் சந்திப்பதற்காக யாரும் இங்கு வரவேண்டியது இல்லை என அவர்கள் அறிவுறுத்தி இருந்தார்கள். ஆனால், அவர்களுடைய உடல்நலம் படிப்படியாகக் குன்றி, கவலைக்குரிய சூழ்நிலை உருவானது. ஜமாஅத் உறுப் -பினர்களும் கவலைக்கு உள்ளாயினர். மியான் செய்ஃ.பி (மிர்ஸா ச.ஃபீர் அஹ்மத் சாஹிப்) அவர்கள், கலீஃ.பா அவர்களின் உடல்நலம் துரிதமாக மோசமான நிலையை நோக்கி சென்று கொண்டிருப்பதை அறிந்து, அவர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த நிலைமைக் குறித்து தெரிவித்த -துடன், ஹுஸூர் (அய்யத- ஹுல்லாஹ்) அவர்கள் அப்போது இங்கு வருவது சிறந்தது எனவும் கேட்டுக் கொண்டார்கள். எனவே, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், இலண்டனுக்குச் சென்று, ஹஸ்ரத் நான்காவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களைச் சந்தித்தார்கள். இவர்களைப் பார்த்ததும், ஹஸ்ரத் நான்காவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், ஏன் இங்கு வந்துள்ளீர்கள் எனக் கேட்டார்கள். அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், “ஜமாஅத் உறுப்பினர்கள் தங்களது உடல்நிலைக் குறித்து பெரிதும் கவலைக்குள்ளாகி உள்ளனர். எனவே, தங்களை நலம் விசாரிக்க வந்துள்ளேன்.” எனக் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நான்காவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: “இப்போது எத்தகைய சூழ்நிலை இருக்கிறதென்றால், தாங்கள் உடனடியாக திரும்ப வேண்டும்.” ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், “நல்லது. நான் உடனடியாக திரும்பி விடுவதற்கு டிக்கட் பதிவு செய்து விடுகிறேன்” என்றார்கள். பிறகு, ஹஸ்ரத் நான்காவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் மியான் செய்ஃ.பி சாஹிப் அவர்களிடம், “அவர் (ஹுஸூர் அன்வர் அவர்கள்) எந்த அளவு கட்டுப்படுதலை பேணக்கூடியவர் என்றால், என்னுடைய அனுமதியில்லாமல் அவரால் இங்கு வர இயலாது. இவ்வாறிருக்க, எப்படி அவர் இங்கே வந்தார்?” எனக் கேட்டார்கள். அதற்கு மியான் சாஹிப், தாமே அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இங்கே வருமாறு கேட்டுக் கொண்டதாகவும், அதன் அடிப்படையில் தான் அவர் இங்கு வந்துள்ளார் எனவும் பதிலளித்தார்கள். இதைக் கேட்டதும், ஹஸ்ரத் நான்காவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், தமது வீரமிக்க புதவல்வரின் அந்த உயர் அளவிலான கட்டுப்படும் பண்பு, தம்முடைய எதிர்பார்ப்பிற்கு இணங்க அப்படியே இருப்பதை எண்ணி பெருமிதம் அடைந்தார்கள்.



ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகவும் அதிக பண்பட்ட நாகரீக இயல்புடையவராக இருந்தார்கள். எனினும் மிகவும் எளிமையான வாழ்க்கை முறையையே மேற்கொண்டார்கள். அவர்கள் கலீஃ.பா ஆவதற்கு முன்னுள்ள வாழ்க்கையில் வீட்டில் மேற்கொண்ட அந்த எளிமையான வாழ்க்கை வழிமுறைகள் இப்போதும் தொடர்கின்றன. அவர்கள் தமது வழக்கமான வேலைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதை அனுமதிக்க மாட்டார்கள். அவர்கள் உண்ணும் உணவைக் குறித்து ஒருபோதும் குறை கூற மாட்டார்கள். உணவுகள் வீண் விரயம் செய்யப்படுவதை வெறுப்பார்கள்.

அவர்கள் கலீஃ.பாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பிறகு, ஒருமுறை நான் பெரிதும் உடல் நலக்குறைவுக்கு உள்ளானேன். கடுமையான தலைவலியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எனக்காகக் காலை உணவு தயார் செய்தார்கள். பின்னர், தமக்கான காலை உணவு ஏற்பாடு செய்து விட்டு, அலுவலகம் சென்றார்கள். இப்போதும் கூட, மிக அதிக வேலைப்பளு இருந்த போதிலும், செடிகளை நடுகிறார்கள்; தேவையற்ற இலை, கிளைகளை வெட்டி முறையாகச் செடிகளை வளரச் செய்கின்றார்கள். இதைப் போன்றே மற்றனைத்துப் பணிகளையும் தாமே செய்கின்றார்கள்.

என் மனதில் தோன்றியவற்றை நான் சுருக்கமாக குறிப்பிட்டுள்ளேன். நான் துஆவுடன் இதை முடிக்கின்றேன். நானும் எனது வருங்கால சந்ததியினரும் எப்போதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குறிக்கோளை நிறைவேற்றும் விதத்தில் கிலாஃ.பத்திற்கு முற்றிலும் கட்டுப்பட்ட விசுவாசமிக்க அடியார்களாக என்றும் இருந்து வர எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக! ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களது வாழ்க்கையும் நலமும் இறையருட்களால் நிரம்பட்டுமாக! ஹுஸூர் (அய்யத -ஹுல்லாஹ்) அவர்களின் தலைமையின் கீழ் நமது ஜமாஅத் முன்னேற்றத்தில் ஒரு புதிய உயரத்தை எட்டட்டுமாக! மேலும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் “நான் உம்மோடும் உமது குடும்பத்தோடும் இருக்கின்றேன்” என்ற முன்னறிப்பு, அவர்களது ஆன்மீக மற்றும் பௌதீக சந்ததிகள் மீது தொடர்ந்து தீர்ப்பு நாள் வரை நிறைவேறிக் கொண்டிருக் -கட்டுமாக! ஆமீன்.

*(18-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

சுருக்கமாக, குர்பானி செய்யுமாறு கட்டளையிடும்போது குர்பானி செய்வதும், இரத்தம் சிந்தாதீர்கள் என்று கட்டளையிடும் போது தவிர்ந்து கொள்வதுமாகிய இவ்விரு பயிற்சிகளையும் இறைவன் இந்தப் பெருநாளின் மூலமாக நமக்குக் கற்றுத் தந்துள்ளான். ஆகவே, இந்தப் பெருநாளில் இருவிதமான காட்சிகளும் வைக்கப்பட்டுள்ளன. இது வீரத்தையும் தைரியத்தையும் ஏற்படுத்துவதற்கான நியமிக்கப்பட்ட பயிற்சி பற்றிய உவமை வடிவமாகும். இதிலிருந்து பலன் பெற்றவர்களாய் நாம் உண்மையான தியாகத்திற்காகத் தாயராக வேண்டும். மேலும் நமது ஜமாஅத்தில் இந்த இரண்டு வகையான தியாகங்களையும் செய்பவர்கள் உருவாக வேண்டும். உலக விஷயங்களில் முன்னேறிச் சென்று தமது செல்வத்தை இறைவனுடைய மார்க்கத்திற்காக செலவு செய்யக் கூடியவர்களும் நம் ஜமாஅத்தில் இருக்க வேண்டும். மார்க்க சேவையில் தம்மை முழுக்க முழுக்க அர்ப்பணித்து அதற்காக இரவு பகலாக பாடுபடுகின்றவர்களும் நம் ஜமாஅத்தில் இருக்க வேண்டும்.

இறைவன் நம் ஜமாஅத்தில் இத்தகைய இரண்டு விதமான மக்களையும் உருவாக்கியருள்வானாக. அவ்விருவித மக்களும் தத்தமது நல்லெண்ணங்களுக்கேற்ப தத்தமது பணிகளைத் தொடர்ந்து செய்து வர வேண்டும். அவ்வாறு தொண்டு செய்வதை அவர்கள் தமக்குக் கிடைத்த அருளாக நினைக்க வேண்டும். உலக விஷயங்களில் தாம் முன்னேற்றமடைந்து மார்க்கத்திற்காக அதிகம் வழங்கி விட்டதாகப் பெருமையடிப்பவர்கள் நம் ஜமாஅத்தில் உருவாகக் கூடாது. அதே போன்று மார்க்கத்திற்காகத் தம்மை அர்ப்பணித்த பிறகு தமது தியாகத்திற்கு மதிப்பளிக்கப்படவில்லை என்று சொல்பவர்களும் நம் ஜமாஅத்தில் உருவாகக் கூடாது. அவர்களின் தியாகமெல்லாம் இறைவனுக்காக இருக்க வேண்டும். மேலும் அவனிடமிருந்தே அதற்குரிய பிரதிபலனையும் எதிர்பார்க்க வேண்டும்.

“ இஸ்லாத்தின் போதனைகள் கூறுவது என்னவென்றால், அல்லாஹ் பெண்களிடம் சுவர்க்கம் செல்ல உத்திரவாதம் தருகிற தகுதிகளை வைத்துள்ளான். இது இஸ்லாம் பெண்கள் மீது வழங்கியுள்ள தனிப்பட்ட சிறப்பான கண்ணியம் ஆகும். இந்தப் போதனைகளின் அடிப்படையில் இயல்பாகவே ஒரு கேள்வி எழும்புகிறது. சுவர்க்கம் செல்வது அவ்வளவு எளிதானதா? ஒவ்வொரு பெண்ணையும் அவள் சுவர்க்கத்தின் வாசல்களின் திறவுகோல் எனக் கூற முடியுமா? இதற்குப் பதில் என்னவெனில், நிச்சயமாக ஒவ்வொரு



பெண்ணிடமும் சுவர்க்கத்தின் திறவுகோல் தரப்படவில்லை. ஒவ்வொரு பெண்ணும் சுவர்க்கம் செல்ல உத்திரவாதம் தருபவளாக நடந்து கொள்வதில்லை. உண்மையில், அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளின் அடிப்படையில் தனது சொல்லையும், செயலையும் வைத்துக் கொண்டுள்ள பெண்தான் சுவர்க்கம் செல்ல உத்திரவாதம் தருபவள் ஆவாள். இந்தப் பெண்களே தமது குழந்தைகளின் தர்பிய்யத்திற்காகக் கவலைப்படக் கூடியவர்கள் ஆவர். இத்தகைய பெண்களுக்கு அல்லாஹ்வுடனான உறவு எத்தகையதென்றால், அவர்களின் குழந்தைகளும் அது போன்ற நேசமிக்க உறவை அல்லாஹ்வுடன் ஏற்படுத்திக் கொள்ள ஆர்வம் காட்டுவார்கள். அல்லாஹ்வுடனான அவர்களின் உறவு உயிருள்ள ஒன்றாகும். அவர்களின் ஆன்மீக வாழ்வு அதிலேயே உள்ளது. இந்த ஆன்மீக இருப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆவர். ஏனெனில் வேறு எந்த சமுதாயமோ, மக்களோ அவர்களை வென்று விட முடியாது. வெட்கங்கெட்ட தன்மையையும், ஒழுக்கக்கேட்டையும் தூண்டுகிற எந்தப் பண்பாட்டின் தீய தாக்கத்திற்கும் அவர்கள் ஆளாக மாட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளைக்கு எதிரான எந்த உலகப் பழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு அவர்கள் ஆளாக மாட்டார்கள். ”

(2012 –ஆம் ஆண்டு U.S. ஆண்டு மாநாட்டில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பெண்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து....)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam